
# திராவிடன்

மேதின சிறப்பிதழ்
•
1955
•
விலை 4 அணா
ஆசிரியர் : என். வி. என்.



திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்



# மே முதல் நாள்-தொழிலாளர் திருநாள்!

இந்தியத் துணைகண்டத்தின் அரசியல் துறையில்—விடுதலைப் போரில் பெரும் பணியாற்றியது நம் திராவிடமேயாகும். அதிலும் குறிப்பாக தொழிலாளர் தோழர்களின் ஒத்துழைப்பும் மகத்தான தியாகமுமே வெள்ளையர் ஆட்சிக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதென்று கூறின் மிகையாகாது. இதனை நாம் மட்டும் கூறுவதல்ல நாட்டின் வரலாறே இன்னும் விரிவாக இவ்வுண்மைகளை எடுத்துக் காட்டும்,

எனினும் சுதந்திரம் கிடைத்து எட்டு ஆண்டுகளாகியும் அரசியல் துறையிலே நம்மாநிலம் பழைய கருப்பன் கதைபோன்ற நிலையிலேயே இயங்கப்பட்டு வருகிறது அதற்கேற்ப தொழிலாளர் தோழர்கள் ஏழை—நடுத்தர மக்கள் ஆகியோரின் நிலையும் அவதிக்குள்ளாக்கப்பட்டு வருகிறது.

வெள்ளையர் ஆட்சியிலிருந்த வேலையில்லாத் திண்டாட்டம், பசிப்பிணி பட்டினிச் சாவு ஆகியவைகள் சுயராஜ்ய ஆட்சியிலே மிகக் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்பட்டு வருகிறது! இந்த அவல நிலை இந்தியத் துணைகண்ட முழுவதுமே தலைவிரித்தாடுகிறதா என்றால் அதுதானில்லை. வடநாட்டிலே பல கோடிக்கணக்கான பொருள்களை செலவழித்து பெரிய பெரிய தொழிற்சாலைகளும் நீர்ப்பாசனத் திட்டங்களும் நிறுவப்படுகின்றன. கூடுமானவரை வடநாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டமும், பட்டினிக் கொடுமைகளும் மறைந்துவரும் அளவுக்கு மகத்தான திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன.

இதனை நாம் எடுத்துக் காட்டுவதைவிட அண்மையில் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள், பாக்ரா—நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டபோது அதன் பெருமைகளை விரிவாக எடுத்தியம்பிவிட்டு, சென்னை மாநிலத்தில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம் வளர்ந்து வருகிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியா அனைத்தும் ஒன்று என இனிக்கப்பேசி, செயலில் மட்டும் வடநாட்டைடாலர் கொழிக்கும் பூமியாகவும், தென்னாட்டைச் சந்தைக் கடையாகவும் பயன்படுத்துவது நேர்மையாகுமா? இவ்வித ஓரவஞ்சனையினால் திராவிடத்தின் தொழில் வளம் நசிந்து தொழிலாளர் தோழர்களும், அவர்களின் குடும்பங்களும் பட்டுவரும் அவதியை நாம் விவரிக்கத்தான் முடியுமா?

எனவே நம் மாநிலத்திலுள்ள தொழிலாளர்கள் நிரந்தரமான நல்வாழ்வு பெற வேண்டுமானால் எதன் பேராலும் எவருக்கும் கட்டுப்பட்டுக் கிடக்காத வகையில் நம்நாடு தனி உரிமைப் பெறவேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். இதைத் தவிர வேறெந்த கொள்கையாலும் நம்நாடு அரசியல், பொருளாதாரம், தொழில்துறை ஆகியவைகளில் தலைநிமிர்ந்து நிற்க இயலாது என்பது திண்ணம்.

எனவே இவையனைத்தையும் மேதினமாகிய இன்று திராவிடத்திலுள்ள தொழிலாளர் தோழர்கள் சிந்திக்க வேண்டுகிறோம். வைதீகர்கள் வரட்டு வேதாந்தம் பேசுவது போல அரசியல் துறையில் அனைத்திந்தியாவும் ஒரு ஆட்சியின் கீழ் இயங்குதல் வேண்டும் எனசிலர் கூப்பாடு போடுவர். இப்படி கூப்பாடு போடுபவர்களின் செயலோ திராவிடத்தை சுரண்டல்காரர்களுக்கு சந்தைக் கூடமாக ஆக்கிக்கொடுக்கும் துரோகத்தனத்தில் மூழ்கியிருக்கும்.

இந்தியா அனைத்தும் ஒன்று என எட்டாண்டுகளாக உரத்தக் குரலெழுப்பிய தேசியத் தலைவர்கள்கூட வடநாடு மட்டும் வளம் பெற்று தென்னாட்டு மக்களின் வாழ்வு தேய்ந்து வரும் நிலையைக் கண்டபின்னர் தங்களின் கூப்பாட்டினை நிறுத்திக் கொண்டு ஓய்ந்துபோனவர்களாகக் காணப்படுகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் தனிஉரிமைபெற்ற சின்னஞ்சிறு நாடுகளெல்லாம் அந்தந்த நாட்டு மக்களை வாழ வைப்பதோடல்லாமல் அனைத்துலக அரசியல் விவகாரங்களிலும் வியாபார மாநாடுகளிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் நமது திராவிடமோ எல்லாத் துறைகளிலும் வடநாட்டு ஆதிக்க பீடத்தை எதிர்நோக்கி கைகட்டி வாய்ப்பொத்தி நிற்க வேண்டியிருக்கிறது.

எனவேதான் திராவிடத்தின் இன்றைய முக்கிய பிரச்னை நாட்டுப் பிரிவினையென்பதை தி. மு. கழகம் வலியுறுத்திக் கூறியும் அதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறது. இவ்வித மகத்தான மனித உரிமையைப் பெற தொழிலாளர் தோழர்கள் பெரும்பங்கு கொள்ளுதல் வேண்டும்.

தனிப்பட்ட முதலாளிகளிடம் கூலி உயர்வுக்கான பிரச்னையிலேயே இன்னும் நம் தொழிலாளர்கள் தங்களின் அரிய காலத்தையும், கருத்தையும் கழிப்பதைவிட கூலிமுறையே ஒழிந்து எல்லா தொழிலும், வளமும் இந்நாட்டு ஏழை—நடுத்தர மக்களுக்குப் பொதுவுடமையாதல் வேண்டும் என்ற கொள்கை நிறைவுபெற முனைய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொழிளர் இயக்கப் பிரச்னையில் இந்த அடிப்படைக் கருத்தை வைத்தே பணியாற்றவும் திட்டமிட்டு ஆவன செய்து வருகிறது.

நேர நிர்ணயமின்றி நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் என்று உழைத்துழைத்து உருகுலைந்த மேலைநாட்டுத் தொழிலாளர்கள் முதன் முதலாக வேலை நேர குறைப்புக்குப் போரிட்டனர். அந்த உரிமைப் போரில் கிடைத்த வெற்றியை முன்வைத்து இன்று தங்களின் மகத்தான உழைப்பு உலுத்தர்களுக்கில்லை யென்ற ஆட்சி முறையை வகுத்து தலைநிமிர்ந்து வாழ்கின்றனர்.

நம் நாட்டிலோ மலையைக் கிண்டி எலியைப் பிடித்ததுபோல கூலி உயர்வுப் பிரச்னை மட்டுமே தொழிலாளர் இயக்க கொள்கை யென்ற பத்தாம்பசலித்தனம் இன்றளவும் கையாளப்பட்டு வருகிறது.

எனவே தொழிலாளர் இயக்கத்தில் மலிந்துள்ள இந்த "சர்க்கஸ்" காட்சிகள் அடியோடு ஒழிந்து தொழிற்சாலைகள் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தம். அதன் வருவாய் அனைத்தும் மக்களுக்கு உரிமையுடையது என்ற உயரிய கொள்கை நிலைபெற வேண்டும். இத்தகு திட்டம் செயல்பட வேண்டுமானால் நம்நாடு தனிஉரிமை பெற்றாக வேண்டும்.

எனவே திராவிடத் தொழிலாளர் தோழர்கள் அனைவரும் இம்மகத்தான தொழிலாளர் திருநாளில் அதற்கான உறுதி கொண்டு பணியாற்ற அன்புடன் அழைக்கின்றோம்.

என். வி. நடராசன்

---

## மேதின விழா

### பொதுச் செயலாளரின் வேண்டுகோள்

**திராவிட நாட்டின் ஏழை எளிய பாட்டாளித் தொழிலாளத் தோழர்களின் அமைப்பாக இருந்து பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் ஆங்காங்கு 1—5—55-ம் நாளிலிருந்து 10—5—55-ம் நாள் வரையில், ஏதேனும் ஒரு நாளில் உரிய சிறப்பான முறையில் கொண்டாடும் படியாகக் கேட்டுக்கொள்வதுடன் பல்வேறு துறைத் தொழிலாளர்களை முன்னேற்றக் கழகக் கொடியின் கீழ் ஒன்று திரட்டுவார்களாக!**

**இரா. நெடுஞ்செழியன், பொதுச்செயலாளர்**

---



## அறிஞர் அண்ணா அவர்களின் மேதினச் செய்தி

அன்புள்ள தோழர்களே,

உலகெங்கினும் கொண்டாடப்படுகிற பாட்டாளிகளின் தினமாகிய மேதின விழா நம் திராவிடத்திலும் கொண்டாடப் படுகிறது. ஆனால் மேதின விழா கொண்டாடப்படும் இன்று நம் திராவிடத்தின் நிலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிடத்தில் உள்ள குறைகளைக் கூறினால் நாம் வீணாக காங்கிரசைக் குறைகூறுவதாக நம்மீது குற்றம் சாட்டுகின்றனர்.

ஊராள வந்தவர்களோ தாமும் அறியார்; அறிந்தோர் சொல்லும் கேளார்; என் செய்வது அவர்கள் தேசபக்தர்கள்! நாம் ஏதாகிலும் கேட்டால் கூரையில் ஏறிநின்று கொக்கரிக்க ஒரு கூட்டம் இருக்கிறது. அந்தப் படையைக் கொண்டு நாட்டுக் கொந்தளிப்பை அடக்கலாமென்று காங்கிரஸ் தலைவர்கள் கருதுகின்றனர். அக்கருத்து மிகத் தவறானது. இராணுவப் படைகளால் கூட பட்டினிப் பட்டாளத்தின் புரட்சியை அடக்க முடியவில்லை. இது நான் கூறுவதல்ல. உலக நிகழ்ச்சிகள் கூறுகின்றன. மற்றப் படைகள் என்ன செய்ய இயலும்? ஏதேனும் உளறிக் கொட்டலாம். அதனால் மக்களின் வறுமை நீங்குமா? வேண்டுமானால் அப்படையின் பசியும் பட்டினியும் தீரும். ஆனால் இதோ நம்நாட்டிலே பல்வேறு இடங்களிலே கிளம்பி மிரட்டும் பட்டினிப் பட்டாளத்தின் பசி நீங்குமா? நீங்காது. அப்பிணி நாடு முழுவதும் பரவி பஞ்சத்தை வளர்க்கும் ஆகவே இந்த அவல நிலை தீரவேண்டுமானால் நாட்டுப் பிரிவினை மிக அவசியம். திராவிடநாடு தனிநாடாகப் பிரிந்தால்தான் உத்தமர்களான உழைப்பாளிகள் உள்பட எல்லா மக்களும் இனிது வாழ முடியும், நம் திராவிடத்தில் ஏராளமான வளம் இருக்கிறது. ஆனால் வகையில்லை. ஆகவே, ஏழை நடுத்தர மக்களின் பிரச்னை தீரவேண்டுமானால் திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும்.

எனவே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இம்மேதினத்தில் உழைப்பாளர்கள் அனைவரும் திராவிட நாடு திராவிடருக்கே என்னும் இலட்சிய கீதத்தை தங்களுடைய இருதய முழக்கமாகக் கொள்ள வேண்டுகிறேன். வாழ்க திராவிடம். வணக்கம்.

அன்பன்

சி. என். அண்ணாதுரை

---

## மே தின விழா நிகழ்ச்சிகள்

(1—5—55)

| | | |
|---|---|---|
| சென்னை | ... | பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் |
| திருச்சி | ... | ஈ. வி. கே. சம்பத் |
| மதுரை | ... | ஏ. வி. பி. ஆசைத்தம்பி |
| கோவை | ... | ப. உ. சண்முகம் |
| சேலம் | ... | கே. ஏ. மதியழகன் |
| பொள்ளாச்சி | ... | என். வி. நடராசன் |
| திண்டுக்கல் | ... | சத்தியவாணிமுத்து, பி. சமதர்மம். சுப்பையா |
| வேலூர் | ... | என். எஸ். இளங்கோ |
| தென்மாப்பட்டு | ... | சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன், எஸ். வி. லிங்கம |

# மே தினமும் தி. மு. கழகமும்

சேவல் கூவி விட்டது!—ஆயினும் என்ன
வேலை—வேலை—வேலை!
வானில் மீன்கள் வருமளவும்
வேலை—வேலை—வேலை!
தலைசுழலும்!—ஆயினும் என்ன
வேலை—வேலை—வேலை!
கண்கள் மயங்கும்!—ஆயினும் என்ன
வேலை—வேலை—வேலை

1880-ம் ஆண்டுக்கு முன்பிருந்த உலகத் தொழிலாளர் நிலையை நினைத்தால், ஆங்கிலக் கவிஞன் 'ஹூட்' என்பான் எழுதிய மேற்கண்ட அடிகள்தான் நமது நினைவிலே நீந்துகின்றது! ஏனென்றால் முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் சிக்கி, தொழிலாளர் வர்க்கம் வேதனைப் பெருங் கடலில் வீழ்ந்துகிடந்த காலமது!!

1880-ம் ஆண்டுக்கு மேல், தொழிலாளர்களிடையே சிறிது விழிப்புணர்ச்சி தோன்றலாயிற்று. கள்ளமறியா உள்ளம் படைத்த தொழிலாள வர்க்கம் முதலாளித்துவத்தின் வஞ்சகச் செயலை, சிறிதுசிறிதாக உணரத் தலைப்பட்டது. முதலாளியும் தொழிலாளர்களும் நண்பர்களாக உலவவேண்டிய தொழிற்கூடம், அவர்களது உறவைத் துண்டாடும் கொலைக்கூடமாக மாறியது! அதைத் தொடர்ந்து 1880-ம் ஆண்டிலிருந்து 1890-ம் ஆண்டுவரை சரியாகப் பத்து ஆண்டுகள் இடையிடையே வேலைநிறுத்தங்கள் நடைபெற்றவாறிருந்தன! தொழிலாளி முதலாளி தகராறு வரலாயிற்று!

1886-ம் ஆண்டு மே முதல் நாள், அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகோரி வேலைநிறுத்தம் செய்தனர். முதலாளித்துவமோ ஆட்சியினர் துணையுடன் ராணுவத்தை பாட்டாளி வர்க்கத்தினர் மீது ஏவியது. வறுமையுடன் போராடவே முடியாது சோர்ந்துபோய் நிற்கும் அவர்கள் ராணுவத்துடனும் போராடவேண்டிய சூழல் நேருகிறது! எங்கும் கூக்குரல் அழுகை!

சிகாகோ நகரின் நீண்ட தெருக்களில் இரத்தம் ஆறென ஓடியது. அந்த இரத்த ஆற்றிலே பிணங்கள் மிதந்தவாறு கிடந்தன! அந்த நாள் 'சிவப்பு நாள்' என்று வரலாறு ஏட்டில் தீட்டப்பட்டது!

'தொழிலாள வர்க்கம், தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்காக வீரப்போர் புரிந்த மே முதல் நாளை உலகனைத்திலுமுள்ள பாட்டாளி மக்கள் அனைவரும் கொண்டாட வேண்டும்' என்று முடிவு செய்தது, பாரிஸில்1889-ல் கூடிய இரண்டாவது சர்வ தேசிய தொழிலாளர் காங்கிரஸ்!

பிறந்தது மே தினம்!

உலக நாடுகள் அனைத்தும் கொண்டாடும் ஒப்பற்ற திருநாளாக உழைத்துழைத்து ஓடாய்ப் போன உழைப்பாளிக் கூட்டம் தங்கள் உரிமையை உரத்த குரலிலே உலகுக்குணர்த்தும் உன்னத நாளாக உருவாகியது மே தினம்.

கூனிக்குறுகி கோணல் வாழ்வு வாழ்ந்த பாட்டாளி வர்க்கம் நிமிர்ந்தநடையும் நேர்கொண்ட பார்வையுமாக வீறுடன் எழுந்து சல்லாபக்காரர்களின் உல்லாசலீலைகளுக்கு சாவோலை தீட்டும் திருநாளாக உதயமாகியது மேதினம்!

எட்டுமணி நேர உழைப்பு, எட்டு மணிநேர உறக்கம், எட்டுமணிநேர பொழுது போக்கு என்ற தொழிலாளர்களது உன்னத கோரிக்கைக்கு ஊக்கமூட்டி வெற்றி தேடித்தந்து விட்டது மேதினம்!

அத்தகு புரட்சித் திருநாளைத் தான் இன்று உலகம் முழுதும் கொண்டாடுகின்றோம்!

தொழிலாளர்களின் தனிப்பெரும் விழாவான அந்நாளை நமதருமைத் திராவிடத்தில் கொண்டாட அக்கரை எடுத்துக்கொண்ட ஒருசில இயக்கங்களில் முன்னணியில் நிற்பது திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

'திராவிடர் இயக்கம்—பட்டாளிகள் இயக்கம்' என்று நாம் பல முறை கூறி வந்துள்ளோம் அத்துடன் பல முக்கியமான தொழிலாளர் பிரச்னைகளில் திராவிட முன்னேற்றக் கழகம், முன்னின்று செயலாற்றி வந்திருக்கிறது இனிமேலும் செயலாற்றிவரும்.

ஆனால் ஒரு சிலர் — நம்மைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டவர்கள்—'மேதினத்தைக் கொண்டாட இவர்களுக்கேது உரிமை?' என்று கூறித்திரிகிறதுகள்! அதுகளை நினைத்தால் 'அந்தோ பரிதாபம்!' என்று தான் கூறத்தோன்றுகிறது. நமக்கு 'திராவிடன் என்றாலே உழைப்பவன்' என்று தான் பொருள்! இது எங்கே தெரியப்போகிறது அந்த மரமண்டைகளுக்கு;

சிந்தனை செய்ய முடியாதவர்களைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் சிந்திக்க மனமிருந்தும் சிந்தனை செய்ய மறுப்பவர்களைப் பற்றித் தான் வருந்த வேண்டியிருக்கிறது!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்பவன் திராவிடன்!—வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்பவன் திராவிடன்!! உண்மைக்கு

க. இரத்தினம், கோவை

உயர்வு தருவோர் உணர்வர் இதனை. கட்சிக்காகக் கண்ணை காமாலையாக்கிக் கொண்டு, கேளாக்காதினராகத் திரியும் கூட்டத்தினருக்கு இது தெரியாது! புரியாது!!

தொழிலாளவர்க்கம் இந்த நாட்டின் முதுகெலும்புகள், அவர்கள் வாழ்ந்தால் தான் நாமும் நமது நாடும் நலமே வாழமுடியும் என்ற உயரிய எண்ணத்தோடு, மே நாளை நமது திராவிடத்தில் அறிமுகப்படுத்தி, மே விழாவின் குறிக்கோளை விளக்கிப் பிரசாரம் செய்து வருவதுடன் தொழிலாளருக்கு தம்மால் இயன்ற அறிவுபணி புரிந்துவரும் அறிஞர் அண்ணாவையும், தி. மு. கழகத்தையும் எவர் மறுக்க மறைக்க முடியும்!

'உழவன் உள்ளத்திலே புயல் இருக்குமானால் வயலிலே வளங்காண முடியாது.' என்ற உண்மையை எடுத்துரைத்தவர் யார் அறிஞர் அண்ணாவைத் தவிர?

தேம்பியழும் நெசவாளர் கண்ணீரைத் துடைக்க எவரும் முன்வராத நேரத்திலே கைத்தறித் துணிமூட்டையை தோளில் போட்டுக் கொண்டு தெருத்தெருவாக வீடுவீடாகச் சென்று விற்றவர் எந்தத் தலைவர்! எந்தக் கட்சியினர்? அறிஞர் அண்ணாவைத் தவிர—தி. மு. கழகத்தைத் தவிர!

தஞ்சைப் புயலில் சிக்கி, மக்கள் பஞ்சையராய் அலைந்தபோது ரூபாய் 26000-க்கு மேல் சேர்த்துக் கொடுத்து, ஏழைகளின் கண்ணீரைத் துடைத்தது தி. மு. கழகத்தைத் தவிர யார்!

பொதுமக்களுடன், ஏழைப் பாட்டாளி மக்களுடன் இவ்வளவு தொடர்பு கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர வேறு எந்தக் கட்சி இங்கு மேதினம் கொண்டாட தகுதியுள்ளது!

உழைப்பின் பெருமையை உணர்ந்து செயலாற்ற திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே பின்னடைந்ததில்லை. தொழிலாளர்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளை நன்குணர்ந்து செயலில் ஈடுபட்டால்தான் நற்பலன் கிட்டும். இப்பணியை திராவிடத்தில் செய்யவல்ல ஒரே இயக்கம் தி. மு. கழகந்தான்!

ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர் நிறைந்த கடலையொக்கும்
நேர் உழைப்பவர் தொகை!
நீர் மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல் கொள்வோர் தொகை!

ஆரவாரித்தெழும் அலைகடலைப் போலுள்ளது உழைப்பவர் தொகை. அந்தக் கடலிலே மிதக்கும் ஒருசில ஓடங்களைப் போல உள்ளனர் முதலாளிகள்! கடல்குமுறி, கொந்தளித்து அலைகடலை வாரியிறைக்க முற்பட்டால் சின்னஞ் சிறிய படகுகள் கடலிடையுலவ முடியுமா? இந்த உண்மைத் தத்துவத்தை முதன் முதலாக முதலாளித்துவத்துக்கு எச்சரிக்கை மடலாக விடுத்தது யார்! தி மு கழகந்தானே.

"அழகுமணி மாளிகையின் அலங்காரத் திருவுருவாக ஆனந்த வாழ்வு வாழ அவன் புண்ணியம் செய்திருக்கிறான். ஆனால் நீயோ உழைத்துழைத்தே சாகவேண்டும்! ஏனெனில் அது உன் தலைவிதி; கடவுள் கட்டளை!' என்றெல்லாம் கூறி தொழிலாளர் வர்க்கத்தை ஏமாற்றித் திரியும் கூட்டத்தைப் பார்த்து,

நடவு செய்த தோழர் கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப் பிலாத செல்வர்
உலகை ஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்!

என்று சொல்லி ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டோரின் சூதுப்பேச்சுக்கு பகுத்தறிவு நெருப்பு மூட்டியதும் தி மு. கழகந்தானே!

தொழிலறிந்த ஏழைமக்கள்
தொழில் புரிந்து செல்வர்பால்
அழிவிலா முதல் கொடுக்க
அம்முதற் பணத்தினால்
பழிமிகுந்த அரசமைத்துப்
படைகள் தம்மை ஏவியே
தொழில் புரிந்த ஏழை மக்கள்
சோற்றிலே மண் போடுவார்!

ஏழை மக்கள் உழைத்துக் கொடுத்த பணத்தினால் அரசமைத்துக் கொண்டு, அவர்களுக்கே விரோதமாக முதலாளிகளுடன் சேர்ந்துகொண்டு தொழிலாளர்களுக்குத் தொல்லை விளைவிக்கும் ஆட்சியினரது போக்கை முதன் முதலில் எடுத்துக் கூறியதும் தி. மு. கழகந்தான்!

சிற்சிலர் வாழ்ந்திடப் பற்பலர் உழைத்துத்
தீர்க என்னும் இந்த லோகமே உரு
அற்றொழிந்தாலும் நன்றாகுமே!

என்றும்,

........................இந்தச்
செகத் தொழிலாளர்கள் மிகப்பலர் ஆதலின்
கப்பல்களாக—இனித்
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்
இப்பொழுதே நீர்—பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே!—எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்னே
ஒப்படைப்பீரே!

என்று முதலாளி வர்க்கத்தை நோக்கிக்கூறி உலகிலுள்ள பொருள்கள் எல்லாம் நாங்கள் செய்தோம். ஆனால் நாங்கள்அடையும் பலனோ, தீராத வறுமை? ஏன் இந்த நிலை; இனிமேல் எங்களை ஏமாற்ற முடியாது. ஆகவே உரிய லாபத்தை எங்களுக்கு சரியாகப் பகிர்ந்துகொடு இல்லையேல் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று தொழிலாளர்களுக்காக இந்த நாட்டிலே குரல் கொடுத்த முதல் இயக்கம் தி. மு. கழகந்தான்!

'அறுபது பேர் ஆக்கும் அதனை ஒருவன்
பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர்
[தோழர்களே!'

என்று துணிந்து முதன் முதலில் பொதுவுடமை பேசியதும் தி. மு. கழகந்தான்!

இன்று எங்கணும் நோக்கினும் வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கர உருவெடுத்துத் திரிகிறது. ஆனால் அதற்கான சரியான காரணத்தை இதுவரை எவரும் ஆராய்ந்து அதற்குத் தக்க விடை காணவில்லை. ஆனால் தி. மு. கழகமோ.

'வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவ
[தெல்லாம்
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்
[தோழர்களே!'

என்று பல ஆண்டுகளுக்கு முன்பே கூறியது!

உழைப்பென்பது இன்னதென்றறியான்; பங்களாவிலே பவனிவருவதும், பளிங்கு நிறப்பாவையர் தம் அங்க அசைவுகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதும் மற்ற வேளைகளில் தான் மேற்பணியாற்றும் தொழிலாளர்களை வாட்டி வதைப்பதையும் தவிர அந்த உல்லாச சீமானுக்கு வேறு வேலையே இல்லை! அவன் ஊரிலே ஒரு கோவில்கட்டுவதற்கோ, பழனி போன்ற இடங்களில் மடம் கட்டுவதற்கோ, ஒரு சில வெள்ளி நாணயங்களை அள்ளித் தந்து விட்டால், அவனை 'தர்மப்பிரபு' என்று போற்றுகிறது உலகம், அவனது நிதி உதவியால் எழுப்பப்பட்ட கட்டடத்தை அண்ணாந்து பார்க்கும்

# உழவன் உள்ளத்திலே புயல் இருக்குமானால் வயலிலே வளங் காணமுடியாது.

உலகம், அவன் அதுவரை தொழிலாளர்களுக்கு இழைத்து வந்த கொடுமையை மறந்து விடுகிறது! இச்செயலை தி. மு. கழகம் எப்படிக் கண்டிக்கிறது பாருங்கள்:

உழைக்காத வஞ்சகர் தம்மை—மிக
உயர்வான சாதுக்கள் என்பது நன்றோ?

என்றும்.

ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ—இதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ?

எனவும்.

கூழுக்குப் பற்பலர் வாடவும், சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ!—புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ?

எனவும்,

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்
காணத் தகுந்தது வறுமையாம்—அவன்
பூணத் தகுந்தது பொறுமையாம்!

என்றும் பலரைச் சுரண்டி ஒரு சிலர் வாழும் சுரண்டல் முறை பற்றியும், தொழிலாள மக்கள் கூழுக்குக் கூக்குரலிடும் வேளையில் வேடிக்கையும் விருந்துமாக வாழும் ஈவிரக்கமற்ற பணமுதலைகளைப் பற்றியும் காணும் பொருளெல்லாம் தொழிலாளி செய்தான் ஆனால் அவன் வாழ்விலே காண்பதென்ன? ஓரே வறுமை! இந்நிலை நீடிப்பது நன்று என்றும் உலகத்தை நோக்கி இடிக்குரலில் முழக்கமெழுப்பியதும் தி. மு. கழகந்தான். அது தவிர வேறு எந்தக் கட்சிக்கு உரிமையுண்டு மே தினம் கொண்டாட?

உலக மக்கள் அனைவரும் நல்ல முறையில் வாழ இயற்கை வேண்டிய செல்வங்களை அள்ளித் தந்துள்ளது. ஆனால் அச்செல்வத்தை ஒரு சிலர் தங்கள் சுகபோகத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு பெருவாரியான ஏழை மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லுகின்றனர். இதை,

மக்களெல்லாம் சமமாக அடைந்திட
மானிலம் தந்ததில் வஞ்சமோ!—பசி
மிக்கவரின் தொகை கொஞ்சமோ!

என, தக்க ஆதாரத்துடன் எடுத்துக் கூறிவருவதும் தி. மு. கழகந்தான்!

'முதலாளிகளே! தொழிலாளர்களை எத்தனை காலந்தான் ஏமாற்றி வாழமுடியும்! உறங்கிக்கிடக்கும் தொழிலாளர் சமுதாயம், விழித்தெழுந்தால் உங்கள்நிலை என்ன ஆகும் என்பதைசற்று எண்ணிப் பாருங்கள்!' என்னும் கருத்தை

எலிகள் புசிக்க எல்லாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ!—இனிப்
புலிகள் நாக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரில் தூங்கிடுமோ!

எனவும்,

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும் உத்தேசமில்லை—சொந்த
வலிவுடையார், இன்ப வாழ்வுடையார்

எனவும்,

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பரா கிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர், உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!

என்று எத்தனை உறுதியுடன் கூறியுள்ளது தி. மு. கழகம்.

இன்றைய தொழிலாளர் உலகம், பல தொல்லைகளில் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கிறது. ஒருபக்கம் முதலாளித்துவத்தின் கோரப்பிடி! மற்றொரு பக்கம் மதவாதிகளின் இரும்புப் பிடி. முதலாளிகளிடமாவது உரிமையைக் கோரி போராடலாம். ஆனால் மதவாதிகளிடமோ 'போராட்டம்' என்று கூறவே அஞ்சுகிறது, தொழிலாள சமுதாயம்! பாட்டாளி வர்க்கத்துக்கு மதவாதிகள் இழைத்துவரும் கொடுஞ்செயலை திராவிடத்தின் சரித்திரத்திலேயே முதன் முதலாகக் கூறியது.கூறிவருவது தி.மு. கழகந்தான்!

மத ஓடத்தில் ஏறிய மாந்தரே—பலி
பீடத்தில்சாய்ந்தீரே!

என்றும்,

பாடுபட்டோர்கள், படுக்கையில்லாதொரு
பட்டியில், மாடென வாழ்கின்றீர்—மதக்
கேடர்கள் காலினில் வீழ்கின்றீர்—ஒண்ட
வீடுமில்லாமலே தாழ்கின்றீர்!'

என்றும், ஐயா பசியால் நாங்கள் செத்து மடிகின்றோமே!' எனவுரைத்தால், மதவாதிகள் சொல்லும் வாதத்தைப்பற்றி இதோ,

பாதிக்குதே பசி என்றுரைத்தால், செய்த
பாபத்தைக் காரணம் காட்டுவார்—மத
வாதத்தை உம்மிடம் நீட்டுவார்—பதில்
ஓதிநின்றால் படை கூட்டுவார்!

எனவும்,

வாதனை சொல்லி வணங்கி நின்றால், தெய்வ
சோதனை என்றவர் சொல்லுவார்—பணச்
சாதனையால் உம்மை வெல்லுவார்—கெட்ட
போதனையால் தினம் கொல்லுவார்.

'இந்த நாட்டிலே தொழிலாளர்களுக்காக உழைப்பவர்கள் நாங்கள் தான்; எங்களுக்குத்தான் மேதினம் கொண்டாட உரிமையுண்டு' என்று மார்தட்டித் திரியும் கூட்டத்தைக் கேட்கிறோம், மதவாதிகளைப் பற்றி, அவர்களது தீயச் செயல்களைப் பற்றி எவராவது வாய் திறந்ததுண்டா!

கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகை வாழ் ஒரு புலியே
உயர் குணமேவிய தமிழா.

என்றும்,

இலையே உணவில்லையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலில்லை எனவே முரசறைவாய், முரசறைவாய்!

என்று முரசு முழக்கியதும் தி. மு. கழகந்தான்! அவர்களைத் தவிர வேறு எவர் மேதினத்தைக் கொண்டாடுவது?

திராவிடம் தனி நாடாகப் பிரிந்தால் பொதுவுடமைப் பூங்காவாகத்திகழும். ஆண்டான் அடிமையற்ற திராவிட நாட்டவர் அனைவருக்கும் உரிமையுள்ள அந்த சமதர்மப் பூங்காவில் மக்களின் நிலை எவ்வண்ணம் அமைந்திருக்கும்! இதோ ஓர் எடுத்துக்காட்டு,

உலகம் உண்ண உண்! உடுக்க உடுப்பாய்!
புகல்வேன்; உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்துப் பொதுவில் நடத்து!
வானைப்போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!

இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய கீதமாக இருக்கும். இத்தகைய உன்னத கொள்கையை தன்னகத்தே கொண்டு இயங்கிவரும் தி மு, கழகம் மே தினத்தைக் கொண்டாடாது வேறு எவர் கொண்டாட உரிமை படைத்தவர் என்று கேட்கிறோம்

உலக நாடுகள் அனைத்திலும் போர் முரசு ஒலித்துக் கொண்டிருக்கும் வேளையில் சமாதானத்துக்காக தி. மு. கழகம் செய்யும் கொள்கை முழக்கம் இதோ,

புதியதோர் உலகு செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்

எனவும்

பொதுவுடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்
இதயமெல்லாம் அன்பு நதியில் நனைப்போம்
'இது எனதே'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

என்று கூறி அதற்காகப் பணியாற்றி வருவது தி.மு, கழகந்தானே!

'உழைத்துக் களைத்த தோழர்களே! உங்களை அடிமைகளாக நடத்தும் பணமுதலைகளுக்கு நீங்கள் உழுது பயிரிடுவதேன்! துன்பமும் துயரமும் சுவைமிக்க அத்தியாயங்களாக உங்கள் வாழ்விலே உருண்டுகொண்டிருக்கும் வேளையில், நீங்கள் அவர்களுக்கு நெய்து தருவது ஏன்! மண்ணிலே குழந்தையாகப் பிறந்ததிலிருந்து மரணம்தன் மடியில் போட்டு தாலாட்டும் வரை அவர்களுக்கு உணவும் உடையும் தந்து காப்பது ஏன்! என்றான் ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி, பாட்டாளி மக்களைப் பார்த்து அவன் எழுப்பும் வினா இதோ,

நீங்கள் விதைக்கிறீர்கள்—அயலான் அறுக்கிறான்.

நீங்கள் நெய்கிறீர்கள்—அயலான் அணிகிறான்.

நீங்கள் ஆக்குகிறீர்கள்—அயலான் அனுபவிக்கிறான்.

நீங்கள் ஆயுதம் அமைக்க—அவன் அதை உங்கள் மீதே உபயோகிக்கிறான்.

அதனால்,

நீங்கள் விதையுங்கள்—ஆனால் அயலானை அறுக்க விடாதீர்கள்.

நீங்கள் ஆக்குங்கள்—ஆனால் அயலானை ஆள விடாதீர்கள்.

நீங்கள் ஆயுதம் செய்யுங்கள்—ஆனால் நீங்களே அதை உபயோகியுங்கள்.

இப்படிக் கூறுகிறான் ஷெல்லி. இக்கருத்தையே தான் தி. மு கழகமும் பின்பற்றி பணியாற்றி வருகிறது! தி. மு. கழகந்தான் இந்த நாட்டிலே நல்லதோர் தொழிலாளர் 'இயக்கம்' அதை அண்மையில் கூடிய பேரூர் பொதுக்குழு முடிவும் உறுதிப்படுத்துகிறது. ஆகவே தி. மு. க வுக்குத்தான் மே தினம் கொண்டாட பூரண உரிமையுண்டு! எதிர்ப்பு சிந்துபாடுவோர் உண்மையுணர்வார்களாக!

வாழ்க பாட்டாளி வர்க்கம்!
வளர்க தி. மு. கழகம்!!


அழகிரி நாடக மன்றத்தார்
(மீர்சாகிப்பேட்டை சென்னை–14)
அளிக்கும் முதல் சமூக நாடகம்

அத்தான்

கதை, வசனம்
எஸ். எஸ். தென்னரசு
பாடல்கள்
கவிஞர் கண்ணதாசன்
பூவை. செங்குட்டுவன்
இசையமைப்பு : இரா. சாரங்கராஜன்
பயிற்சி : ஏ. தன்ராஜ்

இடம்? தேதி? எதிர்பாருங்கள்

அமைப்பாளர், வி. கன்னியப்பன்



கால் ஆணிக்கு மேல்பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப் போல் ஏற்பட்டு நடக்கும் போது பாதமானது தரையில் வைக்க முடியாமலும் கல் பட்டால் துடி துடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1க்கு விலை ரூ. 2-8-0
தபால் சார்ஜ் இனம்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
சென்னை–12.

# புழு போரிட்ட வரலாறு

இரா. இளஞ்சேரன்

அது உலகின் 'பிள்ளைப் பிராயம்'...

அநீதி காலம்...நீதி, நேர்மை கண்ணியம் எல்லாமே வல்லவனின் உருவ நிழலிலே ஒளிந்திருந்த மண்ணுகிப்போன பண்டைய நூற்றுண்டுகள்...

பிரம்மாண்டமான தீக்குண்டம்—எரிதலின் வெப்பச்சூழல்—அதிலே 'புனிதத்தத்துவங்கள்' பொசுங்கிப்போன நிலை...புரூனோவின் இலட்சிய நெஞ்சம், கொள்கையாளரின் பிரேத அடுக்குகள் புதிய எண்ணத்தின் விரிவுரைகள் எல்லாம் அங்கே வெந்து சாம்பலாகின்றன.

அந்தச் சட்டங்களை விசித்திர விளைவுகள் பெற்றெடுத்துப் போட்டன...சரித்திரம் இறந்த காலத்தின் நிகழ்ச்சி தொகுப்பு மட்டுமல்ல—மறைந்துபோன முட்டாள்கள் கிறுக்கித் தள்ளிய விகட பிரபந்தம்—சரித்திரம் நிகழ்கால வாழ்வினருக்கு வாய்த்த மிகப் பெரிய பாடபுத்தகம்!......

வரலாறு கண்ணீர் வடித்த அந்த கோர நிகழ்ச்சிகளில் எத்தனை சோகம் ததும்புகிறது. எத்தனை நல்ல இதயங்கள் அந்தச் சூதாட்டத்திலே வெட்டுக் காய்களாயின...

அடிமை சந்தையிலே. விலை பேசப்பட்ட மனித ஜீவன்கள் ...மனிதனை மனிதனே விலை பேசும் பண்பு அப்போது சட்டமாக சம்பிரதாயமாக நிலவியதே!

உண்மை பேசிய கலிலியோ விரட்டப்பட்டான்! அறிவுலக மேதை, புத்தி யிழந்தோருக்கும் புரோகித பரம்பரையினருக்கும் கோமாளியாகக் காட்சியளித்தான்!

கிரேக்க ஞானி சாக்ரடீஸ்—அறிவுப்பரிதி விக்ளிப்—சுதந்திரத் தந்தை ரூசோ—பேனு வீரன் வால்டேர் ஆகியோரின் அத்தனை சிந்தனைச் செல்வங்கள் இருட்டுலக தர்பாரிலே வாரி யிறைக்கப் பட்டன!

ஏழையின் சார்பிலே குரல் கொடுப்பவன் நிழலில் சாவு ஒளிந்து கொண்டிருக்கிறது! புதுமைக் கருத்துக்களை பிஞ்சுப் பருவத்திலேயே அழிக்க முயன்ற அந்த முட்டாள்களின் அணி வகுப்பு பெரிது! - மிகமிகப் பெரிது!......

ரோமாபுரி பற்றி யெறிந்த போது இசை மீட்டிய நீரோ...

ரத்தக்குளத்திலே நீச்சல் விளையாடிய தாமர்லேன்...

ரசவல்லிகளின் கன்னங்களில் கவிசேச சோபிதத்தை கற்றறிந்த ரஸ்புடீன்...

குழந்தைகளின் ரத்தத்திலே குளித்து மேனியிலே மெருகேற்றிய பிரான்ஸ் நாட்டு லூயி...

அதிகார போதையால் நாட்டோரை சிரமழித்து வெட்டுண்டு வீழ்ந்த சார்லஸ்...

சரித்திரம் இந்த 'தேய்பிறை அவதாரங்களால்' திணறித்தவித்தது!...அந்த நாளிலே ஏழைக்கு அழக்கூடத் தெரியாது! திமிர் பிடித்த சர்வாதிகாரம் அவனது 'திராணி'யை அழித்து விட்டிருந்தது...

இலட்சியத்தின் வண்ண மெருகு இழைத்த புதிய நூற்றுண்டுகளை வரலாறு ஏடு திருப்பியது! ஏழை அப்போதெல்லாம் சின்னஞ்சிறு புழு! 'உலகம் உன்னுடையது' என்று அவனிடம் எவரும் சொல்லவில்லை.

ஏழையர் உலகே வேறு. அங்கே அவதி இருக்கும்; அழுகை இருக்கும். உழைப்பு இருக்கும் அவன் கண்டதெல்லாம் கொடுமை! கொடுமை!!



பரமண்டலத்திலே பிதா வாழகிறார், அந்த தேவத்திருமகனின் ஆசிக்காக...சிலுவை தாங்கிய புரோகிதனின் சொற்களிலே ஆயிரமாயிரம் அனாதைகள் சுகக் கனவை தரிசித்தின...இறப்பிற்கு பின் ஏதோ வொரு வாழ்வு—மேலுலகத்தின் மோகன சுழலில், காலமெல்லாம் மூழ்கிக் கிடக்க அவர்கள் விரும்பினர்...

பணம் படைத்தோன் சொர்க்கத்தை பூமியிலேயே சிருஷ்டித்துக் கொண்டான்! அங்கே மதுவும் அதைவிட போதைதரும் பழரசமும் ததும்பி வழிந்தன. கருப்பு திராட்சை விழுந்த கனிந்த உதடுகள் அங்கே புதிய புதிய இனிமை சாம்ராஜ்யங்கள்!

ஏழை இதனை போன நாள் செய்த புண்ணியமாக நினைத்துக் கொண்டான்! தேவாலயம் அவனுக்கு கற்றுத்தந்த சில வார்த்தைகள் அவனை நாசத்தின் ஆழத்திலேயே வாழவைத்தன!...

சரித்திரத்தில் நீண்ட இடைவேளை திரை விரித்தது...

புதுமை விரும்பிகள் சிந்தனைச் செல்வத்தை அங்கங்கே குவித்துப்போட்டு கொடுமையாளரின் பலிபீடத்திலே பிணமாயினர்... அங்கே சிந்திச் சிதறிய ரத்தத் துளிகள் ஆயிரமாயிரம் இலட்சியக் கதைகளை பேசின...... ஏழைக்கு ஏதோவொரு புதுமையான உணர்ச்சி...'நிலவு'நாட்கள் அவனுக்கும் சொந்தமாயின. அதுவரையில்லாத நினைப்புகள் களம் புக, அவனுக்கு வாள் வடித்துக் கொடுத்தன. ...புதிய மாறுதல்...அவனுக்காக வாதாடியோரை உலகம் மேதையென அழைத்தது!

புழு 'பெரிய இதயத்தை' வளர்த்துக் கொண்டது.

கொடுமைகளில் 'மயானத்துச் சாயல்' தென்பட்டது. அழுகை மட்டுமே நிழலிட்ட, ஏழையின் கண்களிலே பழி உணர்ச்சி நிறைந்தபோது அடியார்களையும் சீமந்தக் குழந்தைகளையும் காப்பாற்ற பரமண்டல பிதா வரவேயில்லை! ஏழை முதன் முதலாக சிரித்தான்...அந்த சிரிப்பிலே பரம்பரை வளர்த்த பழுது பாடு, பிரபுத்வ பெருமைகள் மத மகத்துவம், மோட்சலோக புனிதச் சீட்டு எல்லாமே எரிந்தொழிந்தன!

உலகம் புதிய சரித்திரத்தை உணர்ச்சிக் கொதிப்போடு எழுதிக் கொண்டிருந்தது. சர்வாதிகார அவதாரங்களை ரத்த ஆற்றிலே தெப்பமாக்கிவிட்டு ஏழை கைகொட்டி ஆர்ப்பரித்தான்!

சவுக்கின் சுழற்சியையும் நெருப்பின் வெம்மையையும் அவனது சந்ததி அனுபவித்திருக்கிறது... கொக்கு வேட்டைக்காக விருந்து நடத்திய சீமான் அதனையே வீரமென்று தவருக நினைத்துக் கொண்டான்.

புழுவின் போர்ப் பரணி வையகத்திற்கு பல சுவையான சேதிகளை படையலாக்கியது. அந்த சேதிகளை இனிய உணர்ச்சி பின்னணி செய்யவில்லை. இடியும் மின்னலும் ஆலவட்டமாகக் கொண்டு அவை பிறந்தன. அழிவுப் பாதையிலே எண்ணற்ற ஜீவன்கள் சவமாகச் சாய்ந்த பிறகு—கொழுத்துத் திரிந்த மன்னுதி மன்னர்களின் குரல்வளையைப் பிழிந்த பிறகு—கொடுமைகளுக்கு பல்லாண்டுபாடும் கருப்பு நினைவிற்கு நெருப்பிட்ட பிறகு புதிய உதயத்தை வையம் கண்டது! புதிய வெற்றிக்கு காலம் மலர் தூவியது.

நெருப்பெடுத்து கொழுந்து செய்யும் விழிபறக்க, பகைப்புலத்தின் மேல் கொடுவாள் வைத்த ஏழையர் உலகு நல்ல சித்தாந்தங்களை சொந்தமாக்கிக் கொண்டது. சிந்தனையாளரின் புதிய தத்துவங்களை தாங்கிக் கொள்ளுமளவிற்கு சமுதாயம் பண்பட்டிருக்கவில்லை,

வேதனையில் புழுவென நெளிந்தோர் தமது வீரத்தை உணர்ந்தபின் அவர்கள்கொண்ட உணர்ச்சி ஆவேசம்...தணலையும் விழுங்கும் பழிமனத்தோடு கண் மண் தெரியாது எல்லாவற்றையும் வெட்டிச் சாய்த்து விபரீத கூத்தாடினர்...

இலட்சியமில்லாத போர்ப் பரணி தோல்வியின் முகாரியோடு அடங்கிவிட்டது. இடைவேளையிலே ஓய்ந்த ரஷ்யாவின் அரும்பு புரட்சியும், விபரீத விளைவு தந்த பிரெஞ்சுப் புயலும் சரித்திரம் கண்ட அரைகுறை தயாரிப்புகள்!

பாடுபடுவோனின் பரிதாபக் கதறலிலே வீணைமீட்டிய உல்லாச அவதாரங்கள் ஏழையால் எதுவும் முடியும் என்பதைப் புரிந்து கொண்டனர். அரசியலில் அவன் பெரிய சிக்கலாக வளர்ந்து விட்டான்! மேன்மை பொருந்தியோர் புரட்டிய சட்ட புத்தகத்தை, உழைப்பாளியின் புழுதிக் கரம் தொட்டது. புதிய வாழ்விற்கு அடிப்படையிட்ட நல்ல திருநாட்களை அவன் வாழ்த்தினன். அந்த தினங்களில் ரத்தத்தின் மணமும், மேட்டுக் குடியினரின் புலம்பலும், பிணக்குவியலும் பழைய சுவையோடு காட்சியாகின்றன. வரவிருக்கும் புதிய பொற்காலத்திற்காக் பண்டைநாள் புரட்சி வரலாறுகள் திரும்பவும் புரட்டப்படுகின்றன. அத்தகு நிகழ்ச்சிகளிலே 'சிகாகோ சித்திரம்' பெரும் புகழ் பெற்றது. புழுவின் போர்க் காதையிலே சுவையான அந்த திருநாள் எல்லார்க்கும் எல்லாம் இருப்பதான புது வையத்திற்கு அணிவிக்கப் பட்ட பொன்னுரம்...அந்த தினம் தேய்பிறையாளரின் வாழ்விலே நல்ல நிலையை கருவாக்கட்டும்!...

......................"வாள்
அடியில் வீழ்ந்து கிடக்கும் தோள்களை
அலையவிட்டுப்பார்! இமையின் ஆழம்
இருண்ட சமுத்ரம்! நேரில் கண்டதை
நெஞ்சில் கொடுத்து நோக்கடா!
[பழமையை
மாற்று! மாற்று!! மாற்றடா!!! இமைப்பில்
ஆற்றல்தொடங்கு! ஆணையிட்டேசொல்!
மதக்களிறேபோ! எதிரியா? கொலைசெய்
வாளில் பிழிந்திடு! மருத்துவம்
[அதுதான்"—(சுரதா)

---

மலைநாட்டுப் பெண் — தொடர்ச்சி

ஆதரிப்பாரற்ற அனாதையாக அலைய விரும்பினுளில்லை. நடந்தாள்...நகர்ந்தாள். கடலைக் கண்டாள்! 'வா வா' என்று அதுதான் தன் கரம் நீட்டி அழைத்தது. திரும்பிப் பார்த்தாள் தன் வாழ்க்கைப் பாதையை...! தொட்டிலுக்ும் மரணத்திற்கும் இடைபட்ட தன் வாழ்வை நினைத்தாள்! 'பள்ளம்' செய்த சதியை நினைத்தாள்! இரண்டு துளி நீர் உருண்டன. முறைதவறிய மன்னன்... நெறியறியா வேடுவன் நேர்மையறியா நிலப் பிரபு இவர்களை நினைத்தாள்! கண்ணீரில் நனைந்தாள் துயில் எழா அரங்கனை நினைந்தாள்! பக்தர்களின் "ஏன் பள்ளி கொண்டீரய்யா" என்ற பாடல் கேட்டது. அவள் செவிக்கு! புன்னகை பூத்தாள்!

"எத்தனை முறை பாடினும்
[எழுந்தனனே
எத்தர்க்கு இறையாகினயோ
[தமிழகம்"

என்று நினைந்தாள்! நீளமூச்சு விட்டு அழைக்கும் ஆழ்கடலில் கலந்தாள்! இவள் யார் தெரியுமா? அவள் தான் அன்னை காவேரி!

# மலை நாட்டுப் பெண்

— ப. உ. சண்முகம் —

வெள்ளிக் கிண்ணத்திலே வெண்முத்துச் சோறிட்டு அதில் ஆமாக்கு நெய்யுமிட்டு சுவைசேர் பருப்பு கலந்து, விண்ணகத்து விளக்காம் வெள்ளித் தட்டைக் காட்டி "மலர்க்கரம் நீட்டி, மயக்கூட்டும் மழலை மொழிந்திடும் குழலே, குலவிளக்கே, துயரோட்டிடும் தூங்கா பொன் விளக்கே" என்று கொஞ்சும் மொழிபேசி, சுவை உணவை அள்ளி அள்ளி ஊட்டி பின் தங்கத் தொட்டிலிலே மெல்லிய மெத்தை பரப்பி அதன்மேல் தன் மல்லிச் செண்டை வைத்து, துயிலூட்டும் தாலாட்டு இசைபாடி வளர்த்தாளில்லை அவள் தாய்!

ஏழை...கட்டவே கந்தலில்லை. ஏணைக்கு எங்கு செல்வாள்! அவள் குடிசையோ பாறையின் இடுக்கு! ஈன்ற செல்வத்தை இருக்கச்செய்ய இடம் தேடினாள்! கிடைத்தது குழிவிழுந்த பாறை! இயற்கைத் தொட்டில்!......ஆம் அந்த பாறையின் பள்ளத்திலே படுக்க வைத்தாள்! உலாவும் தென்றலின் இசை கேட்டு, ஈன்றவன் ஈந்திட்ட எளிய உணவு உண்டு பாறையின் தொட்டிலிலே தூங்கினாள்—வளர்ந்தாள்—பள்ளத்தைவிட்டுத் தவழத் துவங்கினாள்—வளர்ந்தாள். பின்பாறைக்குப் பாறையும் தாவினாள்! சிறு பிள்ளை பயமறியாது!...வீழ்ந்திட்டாள் கீழே! அன்னையின் அணைப்பிலே கிடந்தவள்......ஆதரவிலே வளர்ந்தவள், வழுக்கி வீழ்ந்தாள்! வீழ்ந்தவளைக் காப்பவன்போல் வந்தான் 'பள்ளம்.' பாவியவன் காட்டிய பாதையெல்லாம் நம்பி நடக்கத் துவங்கினாள்!

"நல்ல அழகி நீ" என்று ஒரு முறை ஒரு பெண்ணின் காதில் காதலன் ஓதிவிட்டால் பேய் அவள் காதில் ஆயிர முறை அறையுமாம்" இதை நினைவில் கொண்டு துள்ளி விளையாடும் அழகு நிறை ஆரணங்கு அவளிடம் "யார் உன் அழகிற்கு நிகரே; உன்—பேரென்ன கொஞ்சம் பகரேன்; இல்லையேல்—இவ்விடம் விட்டு நான் நகரேன்" என்று கூறினான் காதகன். அவன் ஏந்திழையாள் அவள் ஏற்றாள் தன் செவிகளில் அவன் கூற்றை! அவள் சிந்தையெல்லாம் ஆசை அலைமோதிற்று! நம்பியே நடந்தாள். 'பள்ளம்' காட்டிய வழியெல்லாம்! அவள் சோர்வுற்ற போதெல்லாம் போதையூட்டும் காதல் மொழி யூட்டியதாலோ என்னவோ தளிர்நடைபோட்டே நடந்தாள். தாவும் பேதையவள் தன் நிலை மறந்தாள்...'பள்ளம்' மறைந்து போனால் அவள் உள்ளம் சோகத்தால் இருண்டு தளிர் நடை தளர் நடையாகும்! மீண்டும் பள்ளம் காண்பாள்...உள்ளம் பூரித்து குதித்துத் தாவுவாள் அவன் தோள் மேல்!

காதல் கானல் நீரல்ல! காமம் வற்றாத ஊற்றுமல்லவே! பாசம் அறுந்திடும் கயறல்ல! மோசம் வெட்டுண்டாலும் துளிர்த்திடும் மரமுமல்லவே! காதகன் 'பள்ளம்' காரிகையவளை தன் ஆசைக்கேற்றவாறே ஆடச் செய்தான்! பாடச்செய்தான்! ஓடச்செய்தான் ஒளிந்து தன்னைத் தேடச் செய்தான்! உள்ளத்தைப் 'பள்ளத்திடம் தந்துவிட்டு தத்தளித்திடும் அத்தளிர் மேனியாளைத் தவிக்கச் செய்வதும் பின்தோன்றி களிக்கச் செய்வதுமாய் இருந்தான்!

தன்னைத் தேடி அலைந்திட்ட அவள் ஆசையை அறிந்துகொண்டான் பள்ளம்! வலிய வருவது எதுவாயினும் எளியதாகத்தானே தோன்றும். வருந்திப் பெற்றால் தான் எதுவும் இனிக்கும்போலும் பள்ளம் தன்னைத் துரத்தி வரும் தையலாளை தவிக்கவிட்டுப் பிரிந்திட துணிந்தான்! வஞ்சகர்களின் நெஞ்சம் வார்ப்படத்தால் வார்த்தெடுக்கப்பட்டதுபோலும்! இல்லையேல் 'பள்ளம்' கள்ளமற்றஅக் காரிகையை விட்டுப் பிரிய விரும்புவானா? பிரிந்தான்...! தேடித் திரிந்த தோகையாள் அவள் கண்டாள் அக் காதகன் வெகு தூரத்தில் நிற்பதை! ஆனால் அப்போதும் அவள் அவனைப் புரிந்து கொண்டாளில்லை. ஆசைக்கு அடிமையான ஆரணங்கு அவள் குதித்தாள் துணிந்து......! உடல் முழுவதும் பலத்த காயம்தான் ஏற்பட்டதே யொழிய எத்தன் அவன் அவளிடம் அகப்பட்டானில்லை! அவனைத் தேடி ஓடும் அவளின் அலங்கோலத்தைக்கண்டான் அரசன் ஒருவன்! தடுத்தான். நிலை தடுமாறிக் கிடந்த அவளை நிறுத்தினான்......!

கண்டாரைக் கல்லாக்கும் கட்டழகி அவளின் முழுத்தோற்றத்தையும் கண்டான்! புன்னகை இல்லாத இதழ்களிலே இளமையின் துடிப்புகள், சோகம் நிறை விழிகளிலே மோகமூட்டும் சோபிதம்...அமைதி நிறை அவள்தோற்றம் அரசன் அவன் நெஞ்சினிலே புயலைக் கிளப்பியது! காந்தம் கண்டான் காரிகையாளின் நடையினிலே!...அறம் காக்கும் ஆண்டவன் தான் எனும் நெறிமறந்தான்! ஆசை அவனை அரக்கனுக்கியது போலும்! அவள் அனுமதியின்றி, அவள் இளமையின் மின்சாரம் கொஞ்சம் பருகியானதும் விலக்கி விட்டான்! அவன் மன்னன்! பலவந்தமாக நாடாள்பவனாலேயே நாசமாக்கப்பட்டபின் அவள் எங்கு போவாள்! அரசன் கைவிட்டதும் ஆண்டவனைத் தானே நாட வேண்டும்! அதுதானே நம் நாட்டு பெண்களின் நிலை.

வலம் வந்தாள்! வணங்கினாள் அரங்கனை! பக்தர் பாடிடும் பள்ளைக் கேட்டே உறக்கம் தெளியாதாள் கண்ணீரோடு வலம் வரும் வனிதையைக் கண்டா இறங்கிடுவான்! கோபிகைகளின் கண்ணீரையே தன் ஆவல் தீர்க்கும் தண்ணீரெனக் கொண்ட கமலக் கண்ணன் அல்லவா அரங்கன்! அசையாதச் சிலையாய் உறங்கும் அரங்கனைத் துயிலெழுப்ப இயலாத நிலையிலும் கூட பேதையவள் பக்திபோதை தெளியக் காணோம்! ஆலயம் ஆண்டவனின் இருப்பிடமாய் அல்லாது அக்ரமக்காரர்கள் தங்கள் பொழுது போக்கும் கூடமாய் இருக்கக் கண்டாள்! விலகினாள்...விஷமேந்திகள் வாழும் நாட்டினும் விலங்குகள் வாழும் காட்டில் வாழ்தல் மேலெனக் கொண்டாள்! நடந்தாள்...

காட்டினிடையே கந்து கங்களைக் கண்டாள்!...அவைகளைக் கண்டு ஓடும் ஜந்துக்களையும் கண்டாள்! சீறி போரிடும் புலிகளைக் கண்டு பிரி ஓடிடும் யானைகளையும் கண்டாள் அவள்—பெண்! என் செய்வாள்! காட்டின் நடுவேதிரிய அஞ்சினாள்! கொஞ்சம் ஓரம் வந்தாள்! கண்டு விட்டான் வேடன் ஒருவன்! காதற் கலையை விண்டிடும் கட்டழகி, மோக வலை வீசிடும் அவளின் தேககாந்தி! குரும்புப் பார்வையால் இன்பநினைவுகளைத் தூண்டிடும் கரும்புச் சிலையவளைப் பார்த்ததுமே தன் நிலை இழந்தான்! வீசினான் தன் வலையை! தோகையவளும் சிக்கினாள்! நின்றிட்டாள்! 'வண்ணச் சிலையே! கவிஞன் சொன்ன கலைகளைக் கண்டேன். காட்டில் உலாவிடும் சினிச்சிலையே! தீட்டிய ஓவியமெலாம் தோற்றது உன் தோற்றம் கண்டு! மாற்றார் கைபட்டறிய மல்லிச் செண்டே! மருளாதே! பயம் கொண்டு சுருளாதே! உனைக் கண்டதும் 'ஊமை' யான் கவியானேன்! கற்பனைக் கெட்டாத புதுகாவியம் நீ! 'அற்பன்' என்றெண்ணாதே என்னை. நின் பொற்பாதமே கதியெனக் கிடப்பேன்! மடக்கொடியே! என்றெல்லாம் பேசினான் வேடன்! ஆனால் அவள் அதை ஏசல் எனக் கொண்டாள்! இருப்பினும் இறையானாள் இதயமில்லா அவனுக்கும்!...இளமையின் காந்தம் இழந்தாள்...ஓடினாள் ... ஓடினாள்...... அலறியவாறே ஓடினாள் அரங்கன் ஆலயம் நோக்கி! வலம் வந்தாள் மீண்டும். வணங்கினாள்! கண்ணீரால் அவனைக் கழுவினாள்! அவன் துயில் கலையவில்லை!

ஆலயத்தே அவளைக் கண்டுவிட்டனர் நில பிரபுக்கள்! அவளின் கண்ணீர் தெரியவில்லை அவர்கட்கு! அக்கண்ணீர் வழியும் விழிகளில் ஊறிடும் இளமையைக் கண்டனர் அந்த இதயமில்லாதார்கள். திருப்பள்ளி யெழுச்சி பாடியவாரே பள்ளியறைக் கனவு காணத் துவங்கினர். பாவையவளை ஆதரிப்பதாய் கூறி அழைத்தனர்! மதவேடமிட்ட அவர்களின் 'விடம்' அறியாது நம்பினாள்...பின் தொடர்ந்தாள்! இறையானாள் அந்த அரக்கர் தம் கூட்டத்திற்கு! அவளின் மேனி குலைந்தது! இளமை அழிந்தது! கள்ளமற்ற அம்மலைநாட்டுப் பெண் உள்ளமற்ற எண்ணற்றவர்க்கு இறையாகி தளிர்நடை ஒழிந்து தள்ளாடி நடந்தாள்... கூனிக்—குறுகி தவழும் நிலை அடைந்தாள்! சீண்டுவாரில்லை! 'வா'வென்று வேண்டுவாரில்லை!

11-ம் பக்கம்

## விவேகானந்தரின் அழைப்பு

(க. நெடுஞ்சோழன்)

●

உலகின் பல்வேறு நாடுகளின் வளர்ச்சியைக் கண்ட விவேகானந்தர், தன் தாயகத்தின் முன்னேற்றதிற்கு தடையாக முன் நிற்பது "மூட நம்பிக்கை" என்பதை தெளிவாகத் தன்கடிதமொன்றில் எழுதியுள்ளதில் சில பகுதிகளே கீழே காண்பது:

யோக்கஹாமா ஜூலை 10—1893

அன்புள்ள ஐயா,

நான் ஜப்பானியரைப்பற்றி நினைப்பன யாவும் இச்சிறு கடிதத்தில் எழுத முடியவில்லை ஆண்டு தோறும் நம் இந்திய இளைஞர் சிலரேனும் ஜப்பானுக்கு வந்து போக வேண்டும் என்பது எனது அவா. உயர்வுக்கும், நல்லவற்றிற்கும் இந்தியா தாயகமானது என்பது ஜப்பானியர் எண்ணம்.

ஆனால் நீங்களோ, வாழ்நாள் முழுவதும் பயனற்றவற்றைப் பேசும் வீணர்களாக இருக்கிறீர்கள், ஜப்பான் வாருங்கள் இம் மக்களைப் பாருங்கள். வீடு திரும்பி வெட்கித் தலை குனியுங்கள் நீங்கள் வெளியில் சென்றால் உங்கள் ஜாதி கெட்டுவிடும் என்று எண்ணும் அறிவீனர்களாக இருக்கிறீர்கள். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வளர்க்கப்பட்டமூட நம்பிக்கைகளை மென்மேலும் வளர்த்துக் கொண்டும் தீண்டாமையைப் பற்றி வாதம் செய்து கொண்டும் நாட்களை வீணே கழிக்கின்றீர்கள். வளர்க்கப்பட்ட சமுதாயக் கொடுமையால் மனித இனத்தை உங்கட்கு அப்பாற்பட்டதாகச் செய்து விட்டீர்கள்,

பல ஆசிரியர்மார்கள் எழுதியுள்ளவைகளை, கடற்கரையில் உலவிக்கொண்டு, மனப்பாடம் செய்து முப்பது ரூபாய் கூலி வரும் குமாஸ்தா வேலைக்கோ அல்லது சட்ட நிபுணர் பதவிக்கோ படும்பாடு பரிதவிக்கத்தக்கது. இங்ஙனம் படித்த மாணவனுடைய கால்களைச் சுற்றிக்கொண்டு அவனுடைய பிள்ளைகள் பசிப்பிணியால் இடும் இரைச்சலோ கொடுதீ கொடுதீ உங்களுடைய புத்தகங்களையும், பட்ட உடைகளையும், பட்டத்தாள்களையும் மூழ்கடிக்கக் கடலில் நீர் இல்லையா! இதுதானா வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம்! இங்கே வாருங்கள் குறுகிய வளைகளிலிருந்து வெளி வந்து நெடுந்தொலைவு சுற்றிப்பாருங்கள், நாம் உயரிய நோக்கங்கட்காக உழைப்போம். பின்னால் திரும்பிப் பார்க்க வேண்டாம். உங்கள் உயிர்க்கு இனியரானவர் அழுதாலும் பின் நோக்கம் வேண்டாம், முன் நோக்கமே வேண்டற்பாலது.

முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் தடையாகவுள்ள புரோகிதர்களைப் புறக்கணியுங்கள். அவர்கள் உள்ளத்தை மாற்ற முடியாது அவர்கள் உள்ளம் ஒரு போதும் விரியாது. அவர்கள் பல்லாண்டுகளாக இருந்து வரும் மூடநம்பிக்கை, கொடுமை இவற்றினின்றும் தோன்றியவர்கள். அதனால் முதலில் புரோகிதத்தையே சமூகத்திலிருந்து கலைந்து எறியுங்கள்.

கோடிக்கணக்கிலுள்ள இந்தியா, தன் மக்களில் ஆயிரம் பேருடைய தியாகத்தையாவது விரும்புகிறது. அவர்கள் மனிதத் தன்மையும், தியாக உள்ளமும், எளியவர் மேல் இரக்கமும் அறியாமை இருளில் ஆழ்ந்துள்ள மக்கட்கு அறிவூட்டும் பணியும் முன்னோரால் விலங்கு பிணைக்கப்பட்ட தாழ்நிலையிலுள்ளவரை மனிதராக்கும் முயற்சி கொண்டவராக இருத்தல் வேண்டும் மேலும் அமைதி ஆரவாரம் இன்மை நிதானமான தொண்டு இவையே வேண்டுவன.

இவற்றைச் செய்யத் தன்னலமற்ற நம்பிய அறிவு பெற்ற இளைஞர் எத்தனைபேரைச் சென்னை மாநிலம் வழங்குதல் கூடும்? உங்கள் அன்புள்ள

விவேகானந்தன்

# ★ தி. மு. கழகத்தின் புதிய பொதுக்குழு உறுப்பினர்கள் : முழு விவரம் ★

**(1955 ஏப்ரல் திங்கள் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்)**

●

## சென்னை மாவட்டம்

1 இரா. நெடுஞ்செழியன், சென்னை-1
2 என். வி. நடராசன், சென்னை-1
3 தோழியர் அலமேலு அப்பாதுரை, சென்னை-5
4 இளம்பரிதி, சென்னை-5
5 தோழியர் சத்தியவாணிமுத்து, சென்னை-1
6 கே. எம். கண்ணபிரான், சென்னை-21
7 ஆர். டி. அரசு, சென்னை-12
8 கே. கோவிந்தசாமி, சென்னை-3
9 சி. டி. டி. அரசு, சென்னை-3
10 டி. வி. நாராயணசாமி, சென்னை-23
11 காஞ்சி மணிமொழியார், சென்னை-1
12 மு. புரட்சிமணி, சென்னை-14

## செங்கற்பட்டு மாவட்டம்

1 சி. என். அண்ணாதுரை, காஞ்சீபுரம்
2 சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சீபுரம்
3 ஏ. கிருஷ்ணன், புதுகும்மிடிபூண்டி
4 டி. கே. போரூரான், திருமழிசை
5 கே. டி. எஸ். மணி, காஞ்சீபுரம்
6 பா. சு. மணி, ஆரணி
7 என். ஜி. கண்ணப்பன், மாங்காடு
8 இராம. அரங்கண்ணல், காஞ்சீபுரம்
9 ஓய். என். இராமலிங்கம், உமையாள்பரணஞ்சேரி
10 ஈழத்து அடிகள், காஞ்சீபுரம்

## வடஆற்காடு மாவட்டம்

1 சி. பி. சிற்றரசு, (முகாம் திருச்சி)
2 ப. உ. சண்முகம், திருவண்ணாமலை
3 முல்லை-சத்தி, முல்லைகொம்பை
4 போளூர் கே. சுப்பிரமணியம், போளூர்
5 க. நெடுஞ்சோழன், திருப்பத்தூர்
6 கருத்தோவியன், கருகப்புத்தூர்
7 முல்லை-வடிவேலு, முல்லைகொம்மை
8 ஆற்காடு வில்வம்,
9 எம். பி. சாரதி, வேலூர்
10 எஸ். என். ராசன், சந்தைப்புதுப்பாளையம்

## தென்னாற்காடு மாவட்டம்

1 தில்லை வில்லாளன், சிதம்பரம்
2 இரா. சாம்பசிவம், கடலூர் என். டி.
3 க. அறிவழகன், சிதம்பரம்
4 பி. சொக்கலிங்கம், மேலவன்னியூர்
5 சி. முனுசாமி, விருத்தாசலம்
6 ஏ. தங்கவேல், திண்டிவனம்
7 ச. சிவப்பிரகாசம், புதுச்சேரி
8 ந. நாச்சியப்பன், தேவபாண்டலம்
9 இரா. தேவநாதன், நெல்லிக்குப்பம்
10 டி. என். ஜி. அண்ணாமலை, சிறுமதுரை

## சேலம் மாவட்டம்

1 எம். பி. சுப்பிரமணியம், பெத்தநாயக்கன்பாளையம்
2 ஜி. பி. சோமசுந்தரம், பேளுக்குறிச்சி
3 ப. இராமலிங்கம், குள்ளம்பட்டி
4 ஈ. ஆர். கிருஷ்ணன், சேலம்
5 பி. எம். குப்புசாமி, பெரியாம்பட்டி
6 ப. கண்ணன், சலகண்டபுரம்
7 இரா. தாண்டவன், எடப்பாடி
8 சிற்றுளி அ. சுப்பிரமணியம், சேலம்
9 கே. பெருமாள், நாமக்கல்
10 எச். எல். முருகேசன், அரூர்

## தஞ்சை மாவட்டம்

1 என். எஸ். இளங்கோ, அதிராம்பட்டினம்
2 மு. கருணாநிதி, சென்னை
3 கே. கே. நீலமேகம், குடந்தை
4 அடைக்கலம், பேராவூரணி
5 என். கிட்டப்பா, மாயவரம்
6 எஸ். பெத்தண்ணன், தஞ்சை
7 பி. நாராயணசாமி, மன்னை
8 வி. சுப்பிரமணியம், திருத்துறைப்பூண்டி
9 ஏ. சந்தானம், கீவளூர்
10 வி. பராங்குசம், கும்பகோணம்

## திருச்சி மாவட்டம்

1 ஏ. பி. தர்மலிங்கம், அன்பில்
2 எம். எஸ். மணி, திருச்சி
3 ஜி. பராங்குசம், திருச்சி
4 டி. பி. மூர்த்தி, தவட்டுப்பாளையம்
5 எஸ். ஏ. ஜி. ராபி, திருச்சி
6 எஸ். நெடுமாறன், திருச்சி
7 முத்துக்கருப்பன், தாத்தய்யங்கார்பேட்டை
8 டி. பி. அழகமுத்து, துறையூர்
9 ஐ. எம். ஷெரீப், திருச்சி
10 டி. கே. திராவிடமணி, அரியலூர்

## கோவை மாவட்டம்

1 ஈ. வெ. கி. சம்பத், ஈரோடு
2 கே. ஏ. மதியழகன், சென்னை
3 எஸ். அப்பாவு, ஈரோடு
4 கோவை செழியன், கோவை
5 எஸ். ஏ. இராசமாணிக்கம், கோவை
6 ப. நாராயணன், உடுமலைப்பேட்டை
7 வி. சண்முகநாதன், மேட்டுப்பாளையம்
8 பி. பொன்னுசாமி, பல்லடம்
9 பி. என். ராமானுசம், பொள்ளாச்சி
10 எல். எம். எஸ். நாதன், திருப்பூர்

## மதுரை மாவட்டம்

1 தா. ஆவடையப்பன், சோழவந்தான்
2 எஸ். முத்து, மதுரை
3 எஸ். எஸ். இராஜேந்திரன், சேடப்பட்டி
4 ல. தனுஷ்கோடி, உசிலம்பட்டி
5 கே. விக்ரமாதித்தராசன், திண்டுக்கல்
6 கே. ஏ. கலையழகன், வண்டிப்பெரியார்
7 ஏ. எஸ். பால்ராஜ, ஆண்டிப்பட்டி
8 ஜி. கந்தசாமி, தேவாரம்
9 இருளப்பன், அய்யம்பாளையம்
10 கு. ப. ம. தர்மன் பி.காம், திருமங்கலம்

## இராமநாதபுரம் மாவட்டம்

1 எஸ். எஸ். தென்னரசு, திருக்கோட்டியூர்
2 எம். எஸ். இராமசாமி, அருப்புக்கோட்டை
3 ஏ. வி. பி. ஆசைத்தம்பி, விருதுநகர்
4 முகவை ஆர். எஸ். பாண்டியன், சென்னை
5 சிவசண்முகசுந்தரன், திருநகரம்
6 சு. பாலகிருஷ்ணன், இராசபாளையம்
7 நவமார்க்கண்டேயன், இராசசிங்கமங்கலம்
8 இ. ல. ம. சௌந்திரபாண்டியன், கமுதி
9 உத்தண்டன், விருதுநகர்
10 என். கே. குருசாமி, விளாம்பட்டி

## நெல்லை மாவட்டம்

1 கே. வி. கே. சாமி, தூத்துக்குடி
2 எம். எஸ். சிவசாமி, தூத்துக்குடி
3 கே. செல்லையா, வேப்பலோடை
4 பி. எஸ். கே. ஜெயபால், நாசரேத்
5 டபிள்யூ. டி. துரைசாமி, கோவில்பட்டி
6 சு. கந்தசாமி, விக்கிரமசிங்கபுரம்
7 மு. சபாபதி, குளத்தூர்
8 டி. ஆர். சுப்பிரமணியம், சங்கரன்கோவில்
9 தனசேகரன், பார்குளம்
10 வீரபாகு, திருநெல்வேலி சந்திப்பு

## நாஞ்சில் மாவட்டம்

1 கி. மனோகரன், நாகர்கோவில்
2 சு. வன்னியபெருமாள், கண்ணன்புதூர்
3 ஏ. குமாரவேல், நாகர்கோவில்
4 எம். இராசகோபால், நாகர்கோவில்
5 பி. எம். கண்ணு, குளச்சல்
6 எம். குமாரசாமி, இரவிபுதூர்
7 ஜே. டேவிட், மூணுர்
8 வை. சுப்பிரமணியம், நாகர்கோவில்
9 பி. பத்மநாபன், ஈத்தாமொழி
10 ந. நடராசன், நாகர்கோவில்

●

# மாவட்ட கிளைகளின் நிர்வாகக் குழுவினர்

●

**சென்னை மாவட்டம்**

செயலாளர் : இளம்பரிதி, சென்னை-5
துணைச்செயலாளர் : கோ. செங்குட்டுவன், சென்னை-1
பொருளாளர் : ஆ. ச. சுந்தரமூர்த்தி, சென்னை-7

**செங்கற்பட்டு மாவட்டம்**

செய : கே. டி. எஸ். மணி, காஞ்சீபுரம்
து. செ : ஜே. ஏ. வகாப், செங்கற்பட்டு
பொரு : ஓய். என். இராமலிங்கம், உமையாள்பரணஞ்சேரி

**வடஆற்காடு மாவட்டம்**

செய : எம். பி. சத்தி, முல்லைக் கொம்மை
து. செய : அ. கருத்தோவியன், வேலூர்
பொரு : கன்னையன், ஆரணி

**தென்னாற்காடு மாவட்டம்**

செய : இரா. சாம்பசிவம், கடலூர் என். டி.
து. செய : ஏ. தங்கவேல், திண்டிவனம்
பொரு : ஜி. சொக்கலிங்கம், வி. சாத்தமங்கலம்

**சேலம் மாவட்டம்**

செய : ஜி. பி. சோமசுந்தரம், பேளுக்குறிச்சி
து. செய : ப. இராமலிங்கம், குள்ளம்பட்டி
பொரு : பி. எம். குப்புசாமி, பெரியாம்பட்டி

**தஞ்சை மாவட்டம்**

செய : என். எஸ். இளங்கோ, அதிராம்பட்டினம்
து. செய : பி. நாராயணசாமி, மன்னார்குடி
பொரு : ஏ. வி. டதி, தஞ்சாவூர்

**திருச்சி மாவட்டம்**

செய : ஏ. பி. தர்மலிங்கம், அன்பில்
து. செய : ஜி. பராங்குசம், திருச்சி
பொரு : எஸ். ஏ. ஜி. ராபி, திருச்சி

**கோவை மாவட்டம்**

செய : ஈ. வெ. கி. சம்பத், ஈரோடு
து. செய : வி. சண்முகநாதன், மேட்டுப்பாளையம்
பொரு : பி. பாலசுந்தரம், கோயம்புத்தூர்

## சிங்காரச் சென்னையிலே சீர்மிகு மேவிழா

சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டு மேதினம் இன்னும் விமரிசையாகக் கொண்டாட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. திருவல்லிக்கேணி கடற்கரையில் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ண விளக்குகளுக்கு இடையே அழகும் அலங்காரமும் கொண்ட மேடையில் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் திராவிடப் பாட்டாளி மக்களின் இருளினை நீக்க வழிவகைக் கூற இருக்கிறார்.

பாட்டாளி மக்களின் அணிவகுப்பினைக் கொண்ட பெரியதோர் ஊர்வலம் கான்ரன்ஸ்மித் (திரு. வி. க. திடல்) திடலில் புறப்பட்டு திருவல்லிக்கேணி கடற்கரையை வந்தடையும். எல்லா கிளைக்கழகங்களும் இம் மாபெரும் ஊர்வலத்தில் கழகக்கொடியேந்தி வட்டவாரியாகக் கலந்து கொள்ளும் என்று அறிவித்துக் கொள்ளுகிறோம். திராவிடப் பாட்டாளி மக்களே மேதினச் செய்தியைக் கேட்க வாரீர்!

**அன்பன், இளம்பரிதி**
செயலாளர், சென்னை மாவட்ட தி. மு. கழகம்

**மதுரை மாவட்டம்**

செய : எஸ். முத்து, மதுரை
து. செய : தா. ஆவடையப்பன், சோழவந்தான்
பொரு : இ. காத்தான், நிலக்கோட்டை

**நெல்லை மாவட்டம்**

செய : கே. வி. கே. சாமி, தூத்துக்குடி
து. செய : டபிள்யூ. டி. துரைசாமி, கோவில்பட்டி
பொரு : பி. எஸ். கே. ஜெயபால், நாசரேத்

**இராமநாதபுரம் மாவட்டம்**

செய : இ. ல. ம. சௌந்திரபாண்டியன், கமுதி
து. செய : து. உ. இராமனுதன், மானாமதுரை
பொரு : வி. பி. வடிவேல், விருதுநகர்

**நாஞ்சில் மாவட்டம்**

செய : வி. எம். ஜான், நாகர்கோவில்
து. செய : பி. எம். கண்ணு, குளச்சல்
பொரு : கே. சுப்பிரமணியம், நாகர்கோவில்

# ஆச்சாரியார் மனமாற்றம்?

திராவிட இயக்கத்தின் கொள்கை கோட்பாடுகளை—குறிப்பாக நாட்டுப் பிரிவினையை, இன்றுவரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்களோ—அல்லது தேசியத் தலைவர்களோ ஆதார பூர்வமாக மறுக்க முன்வந்தார்களில்லை. அதற்குப் பதிலாக ஏதோ மூன்றாந்தர நாலாந்தர பேர்வழிகள் பேசும் பாணியிலே திராவிட இயக்கக் கொள்கைகளை கையாண்டி செய்து வருகின்றனர்.

குறிப்பாக 1938-ம் ஆண்டில் ஆச்சாரியார் முதலமைச்சராயிருந்த போது கட்டாய இந்தியைப் புகுத்தினர். அன்று நீதிக் கட்சியும்—சுயமரியாதை இயக்கத்தினரும் இதனை எதிர்த்த போது ஆச்சாரியார், தர்பார் சுந்தரராய் வீற்றிருந்து தத்துவார்த்தங்கள் பேசினர். அடக்குமுறைகளை ஏவினர்! அதே ஆச்சாரியார் இன்று 1955-ம் ஆண்டு இந்திமொழி ஆதிக்ககாரர்களின் வெறித் தன்மையை தி. மு. கழகத்தவரைவிட தீவிரமாகக் கண்டிக்கிறார்! நீண்டதோர் அறிக்கையும் 'கல்கி' வாயிலாக வெளியிட்டிருக்கிறார்.

ஆனால் ஆச்சாரியார் அவர்கள் தமது மனமாற்றத்திற்கு சப்பைக் கட்டாக "நான் அன்றே சொன்னேன் ஒரு நாளைக்கு இந்தியா முழுமைக்கும் இந்தி மொழி ஆட்சி மொழியாகும்—இந்தி படியுங்கள் என்று! ஆனால் சிலர் இதனை ஏற்காமல் குழப்பம் விளைவித்தனர், இன்று நான் சொன்னபடியே வந்துவிட்டது எனினும்...என்று பீடிகை போட்டு தமது மனமாற்றத்தை அறிவித்திருக்கிறார்! நாம் அன்று கூறியது மட்டுமல்ல, இன்றும் கூறுகிறோம் இந்தியா முழுமையும் ஒரு ஆட்சியின் கீழ், அதுபோலவே இந்தி பொது மொழியாகவும் ஆக்கப்படும் என்று சொல்லும் வாதமும், ஆதிக்க ஆட்சி முறையும் நீடித்திருக்காது. அதனை திராவிட மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று.

எனவே ஆச்சாரியார் தமது மனமாற்றத்திற்காக பழைய சம்பவங்களை நினைத்துப் பீடிகை போடவேண்டிய அவசியமேயில்லை. ஆச்சாரியார் அவர்களுக்கு எக்காரணத்தைக் கொண்டோ மொழித் துறையில் ஏற்பட்ட இம் மனமாற்றம் தென்னாட்டின் ஆட்சி முறையிலும் ஏற்பட வேண்டுமென்று விரும்புகின்றோம்.

தென்னாட்டு தேசியத்தலைவர்களுக்கு, மனரும் சக்தியான தி. மு. கழகத்தின் முக்கிய கொள்கையாம், நாட்டுப் பிரிவினையிலும் மனமாற்றம் ஏற்பட்டால்—இம்மேதின விழாவை சுதந்திர திராவிடத்தில் அதுவும் விரைவில் கொண்டாடலாம். மக்களின் வாழ்வையும் மலரச் செய்யலாம். (ஆ—ர்)

●

## ஆச்சாரியாரின் அறிக்கை

இந்தியா ஒன்றுபட்டு வாழ வேண்டுமானால், ஒருமித்த மக்கட் தொகுதியாக முன்னேற வேண்டுமானால் சிறு விஷயங்களில் நமக்குள் சச்சரவும், போட்டியும் நடப்பது தவறு. போட்டிகள் இருந்து கொண்டே போனால் இந்திய நாட்டின் சக்தி வளராது குறைந்தே போகும்.

ஒரு குறிப்பிட்ட பாஷையைப் பேசுபவர்கள் தங்கள் பாஷையைக் கற்க வேண்டும் என்று மற்றொரு சமூகத்தாரைப் பலாத்காரம் செய்வது அன்பு முறைக்கு மாறுபட்ட செயலாகும் அது வெற்றி பெறாது. ஒரு சர்க்கார் புதிய வரி ஒன்றைக் கொடுக்கச் சொல்லலாம். கொடுக்க இஷ்டமில்லாதவர்களை வற்புறுத்தியும் வசூலிக்க முடியும். ஆனால் ஒரு குறிப்பிட்ட புதுபாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்வது வெறுப்பிலும் துவேஷத்திலும் முடியும், இதை நமது பிரதம மந்திரி வெகு நன்றாக உணர்ந்திருக்கிறார். மற்றவர்கள்தான் சரியாக அறியவில்லை. பாஷைப் பிரச்னையில் ஒற்றுமையும் வெற்றியும் அடைய வேண்டுமானால் அன்பு வழியே சரியான மார்க்கமாகும். நம்முடைய ஹிந்திப் பிரமுகர்கள் இதை உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

அரசியல் சட்டத்தில் ஹிந்தி அமுலுக்கு வருவதற்காக ஒரு தேதியைக் குறிப்பிட்டிருப்பது உண்மை திருத்த வேண்டுமானால் அந்தக் கெடுவைத் திருத்த வேண்டுமே யொழிய அதை வைத்துக் கொண்டு மிரட்டுவது தவறு



குழந்தைகளை ஹிந்தி படியுங்கள் என்று சொல்வது நியாயம் 'நீங்கள் ஹிந்தி படித்தால் உங்களுக்கு மேல் உத்தியோகம் கிடைக்கும்' என்று ஆசை காட்டுவது சரி, பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பே நான் சொன்னேன் 'சுதந்திர இந்தியாவில் உத்தியோகங்களுக்குக் கஷ்டப்படுவீர்கள். இப்பொழுதே ஆரம்பியுங்கள் என்றைக்காவது நாம் சுதந்திர ஆட்சி பெறுவோம். இந்தியா முழுவதும் ஒரு ஆட்சியாகும் தனித்தனி சிறுநாடுகளாகப் பிளவுப்பட்டுப் போவதற்கு இனி இடமில்லை. ஹிந்தி படியுங்கள், பரீட்சை வேண்டாம். சும்மா படியுங்கள்' என்று வற்புறுத்தினேன். இதை ஒரு கூட்டத்தார் அப்பொழுது ஆட்சேபித்தார்கள். உத்தியோகம், உத்தியோகம் என்று எப்பொழுதும் எண்ணி எண்ணி ஆசைப்பட்ட கூட்டத்தார்களே ஆட்சேபித்தார்கள். காரியங்களைக் குந்தகப் படுத்தினார்கள்.

### கோபம்தான் வரும்

இதையெல்லாம் எண்ணி இப்போது வருத்தப்பட்டுப் பயன் இல்லை ஆனால் இப்போது பெரிய உத்தியோகங்களுக்கு அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த ஸ்தானங்களுக்கு அன்னிய பாஷையில் தமிழருக்கு அன்னியமான ஒரு பாஷையில்தான் எல்லா பரீட்சையும் செய்வோம் அதில் தேறியவர்களைத்தான் ஸ்தானங்களுக்கு எடுப்போம் என்று சொன்னால் யாருக்குத்தான் கோபம் வராது; எனக்கும் கோபந்தான்.

தமிழ்க் குழந்தைகள் ஹிந்தியையும் படிப்பார்கள் தேறுவார்கள். எந்தப் பாஷையையுமே படித்துத் தேறுவார்கள். ஆங்கிலத்தையே படித்து—எல்லாப் பெரிய உத்தியோகங்களிலும் தங்களையே தேர்ந்தெடுக்கும் அளவுக்குப் போட்டியில் தமிழர்கள் தேறியிருக்கவில்லையா! இல்லை. தமிழ்க் குழந்தைகள் ஹிந்தியைப் படித்து விடுவார்கள்: சந்தேகமில்லை சந்தேகம் எதுபற்றி என்றால் இன்னும் பால் குடிக்கும் பருவம் தீராத ஹிந்தி பாஷையாகிய குழந்தையைப் பற்றித்தான். ஹிந்தி பாஷையானது தற்போது பலவீனமான நிலையில் இருக்கிறது ஆங்கிலத்துக்குச் சமம் இல்லை என்பதில் வியப்பில்லை

### தமிழுக்குச் சமம் இல்லை

வங்காளி பாஷைக்கும் சமமில்லை; மராட்டி பாஷைக்கும் சமமில்லை இந்த நிலைமையில் செய்ய வேண்டிய கடமை என்ன! தமிழ்க் குழந்தைகளை மிரட்டுவது அல்ல இந்தி பாஷையை மிரட்டி அதைக் கொஞ்சம் மேலே தூக்கவேண்டும் எல்லா விஷயங்களிலும் இந்தி பாஷை மூலமே பரீட்சை செய்யும் அந்தஸ்துக்கு இன்னும் இந்தி வரவில்லை

### ஹிந்தி மொழியின் வறுமை

தில்லி மக்கள் சபையில் ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துப் பேசினால் ஆங்கிலத்தில் பேசும் போது பிரதம மந்திரி ஜவகர்லால் நேரு முதல் ஓரளவு படித்த அங்கத்தினர்வரை சுருக்கமாகப் பேசி முடிக்கிறார்கள். விஷயத்தை ஐயமறச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் ஹிந்தி பாஷையை உபயோகிக்கும் போது திரும்பத் திரும்ப ஒருமுறை சொன்னதை பன்முறை கூறி விஷயங்களை விளக்கி துப்புறவாய்ச் சொல்லக் கஷ்டப்படுகிறார்கள். மொழியின் வறுமையும் வளர்ச்சிக் குறையும் திட்டமான பொருளில் சொற்களைப் பிரயோகிக்கும் வழக்கம் இன்னும் ஹிந்தியில் ஏற்படாமல் இருப்பதுமே இந்தக் கஷ்டத்துக்கு காரணம். ஆனபடியினால் தமிழ் மக்களை பள்ளிக்கூடம் போகச் சொல்வதைப் பார்க்கிலும் ஹிந்தி மொழியை பள்ளிக்கூடம் போகச்சொல்வது முதற் கடமையாகும். பரீட்சையில் தேறவேண்டியது தமிழ் குழந்தைகள் அல்ல, ஹிந்தி பாஷையானது பரீட்சையில் முதலில் தேறியாக வேண்டும்.

இத்தனை எழுதியபோதிலும் மனக் கசப்பு கூடாது. வெறுப்பு உதவாது. இந்திய முன்னேற்றத்திற்கும், இந்திய ஒற்றுமைக்கும் என்ன செய்ய வேண்டுமோ அதைத் தமிழ் மக்கள் செய்யாமல் இருந்துவிட மாட்டார்கள் என்பதை நம்முடைய ஹிந்தி சகோதரர்களுக்கு சொல்லுகிறேன்.

உத்தரப் பிரதேசத்தில் இருக்கும் மக்களிடம் போய் தமிழ் மிக நல்ல பாஷை ஆரிய நாட்டின் பண்பாடு நிறைந்துள்ள பழைய பாஷை இதை நீங்கள் படித்துத் தேர்ந்தால்தான் உங்களுக்கு உத்தியோகம் என்று சொன்னால் அவர்களுக்கு எப்படியிருக்கும்! உள்ளம் பதைக்குமல்லவா! நம்முடைய மலையாளத்து சகோதரர்களை எல்லாப் படிப்பு விஷயங்களிலும் தமிழில் பரீட்சை செய்து தேறச்சொன்னோமா! கன்னட ஜில்லாவில் உள்ள மந்நுட்பம் கொண்ட மக்களுக்குத் தமிழில்லாமலே வேலைகள் கொடுக்கவில்லையா! ஜனநாயகம் என்றால் கொடுமையல்ல அட்டகாசம் அல்ல நியாயமும் விசால உணர்ச்சியும் சேர்ந்து இயங்க வேண்டிய ஒரு தத்துவம், தனி ஒரு மனிதனும் சந்தோஷம் அடைய வேண்டிய அமைப்பு.

### அவசரம் எதற்கு?


சாந்த முறையில் நடவடிக்கைகள் நடத்தினால் தேசிய பாஷை வெற்றியடையும் வளர்ச்சியும் பெறும். ஆங்கிலத்தோடு போட்டி போடும்படியான சக்தியை இன்றில்லாவிட்டால் சிலநாட்களிலாவது ஹிந்தி பாஷையானது பெறும். அவசரப்பட்டால் வழி அடைபட்டும் போகும். ஹிந்தி பேசுவோர்களுக்கிடையிலேயே இந்தவிதமான இந்தி அந்தவிதமான இந்தி என்ற பிளவுகள் உடனே தோன்ற ஆரம்பிக்கும்.

தமிழ் இந்தி வங்காளம் எந்தபாஷையுமே அறியாத அன்னிய மேனாட்டு நிபுணர்களைத்தருவித்துப் பொறுப்பும் அதிகாரமும் அவர்களிடம் ஒப்புவிக்கிறோம் அல்லவா! எந்த ஒரு இந்தியப் பாஷையும் படிக்காத மேனாட்டு நிபுணர்கள் ஒருவர் பின் ஒருவராக அழைப்புப் பெற்று இந்தியாவுக்கு வந்து கொண்டுதானே இருக்கிறார்கள். இந்நிலையில் இந்தியாவில் பிறந்து படித்து பண்பும் கல்வியும் பெற்ற இந்திய மக்களுக்கு மட்டிலுமா தடை? இந்தத் தவறான நோக்கத்தை விட்டுவிட்டு குழப்பமுண்டாக்கும் இந்த யோசனைகளை உடனே நிறுத்திவிட வேண்டும்.

பரீட்சை முழுவதையுமே இந்தியில் நடத்துவோம் என்று சொல்லுகிறார்களே அதற்குத்தான் ஆட்சேபம். பரீட்சையின் பல அம்சங்களுக்குள் இந்திக்காக ஒரு தனி எழுத்துப் பரீட்சையோ அல்லது பேச்சுப் போட்டியோ வைத்து அதற்கு என்று ஒரு சில மார்க்குகள் வைத்தால் யாருக்கும் ஆட்சேபம் இராது. பரீட்சை முழுவதுமே எல்லா அம்சங்களிலுமே கேள்விகளும் விடைகளும் இந்தியாகவே இருக்க வேண்டுமென்று சொல்வதுதான் பிசகு ஜனநாயக தத்துவத்துக்கு விரோதம் ஒரு பிரதேசத்தாருக்குப் பட்சபாதம் செய்தவாறாகும்

அரசியலுக்காக பாஷையா அல்லது பாஷைக்காக அரசியலா என்கிற கேள்வியை ஆராய வேண்டும் எந்த விஷயத்தை நிர்வாகம் செய்வதிலும் மக்களுடைய உணர்ச்சி வேகங்களை மறந்துவிடலாகாது மிகப் பிற்போக்கான தென்ஆப்பிரிக்க அரசாட்சியிலுங்கூட ஆங்கிலப் பாஷையைப் புறக்கணித்துவிட்டு டச்சு கலப்பான போயர் பாஷையையே அவர்கள் வற்புறுத்தவில்லை அதைவிடவா நம்முடைய ஏகபாஷைப் பித்தர்களின் அவசரப்பைத்தியம் முற்ற வேண்டும்!

## உழைப்பாளர் முகாம் அமைத்த முதல்வர்



இந்தியத் துணை கண்டத்தில்—முதன் முதலாக அதிலும் திராவிடத்தின் தலைநகராம் சென்னையில் அமைப்பு முறையுடன் கூடிய தொழிற் சங்கத்தை நிறுவிய தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் இறுதி நாள் கொள்கை—உண்மையான பொதுவுடமை மலர வேண்டுமானால் திராவிடம் தனிஉரிமை பெற வேண்டும் என்பதாகும். இதனை நம் திராவிடத்திலுள்ள தொழிலாளர்கள் மனதில் கொண்டு பணியாற்ற வேண்டுகிறோம்.

# அன்புள்ள அத்தானே!

கடிதம் 1.

**அவள் :**

அத்தானே அத்தானே
அன்புள்ள அத்தானே
முத்தான உன் முகத்தை
செத்தாலும் நான் மறவேன்
கொன்றுவிடும் உன் விழிகள்
குளிர் மிக்க பார்வையாலே
என்று சொன்ன அத்தானே
எங்கு நீ போய்விட்டாய்?

மண்ணில் நாமிருவர்
வாழ்ந்தாலும் மடிந்தாலும்
கண்ணும், கருமணியாய்,
காதல் சுடர் விளக்காய்,
நின்று நிலவிடுவோம்,
நிகரற்று வாழ்ந்திடுவோம்
என்று சொன்ன அத்தானே
எங்கு நீ போய்விட்டாய்

உண்ண உண வெடுப்பேன்
உன் உருவம் ஓடிவரும்
கண்ணே, எப்பக்கம்
கண்ணெடுத்துப் பார்த்தாலும்,
தின்றுவிடும் என்னினைவை
தெவிட்டா உன் உருவம்
என்று சொன்ன அத்தானே
எங்கு நீ போய்விட்டாய்?

நம்பிக்கை துரோகமத்தான்
நன்றல்ல இச்செய்கை
வெம்பிக் கிடக்கின்றேன்
வேதனைப் பெருந்தீயில்!
கன்றுக்குத் தாய்துரோகம்
கடுகளவும் செய்யாது!
என்று சொன்ன அத்தானே
எங்கு நீ போய்விட்டாய்?

கடிதம் 2.

**அவன் :**

அத்தானே என்றழைத்து
அனுப்பியுள்ள மடல் கண்டேன்!
முத்தான உன் எழுத்து
முத்தமிட்ட கடிதத்தை
செத்தாலும் நான் மறவேன்
செதுக்காத சிலை வடிவே!
அத்தனை நாள் பழகி, நீ
அத்தானை அறிந்ததென்ன?

நம்பிக்கைத் துரோகத்தை
நமதத்தான் செய்வாரா?
வெம்பிக் கிடக்கவிட்டு
வேடிக்கை பார்ப்பாரா?
காரணத்தை நீ கேட்டால்
கலங்கிவிடும் உன் நெஞ்சம்!
தோரணம்போல் உன் கண்ணில்
தொடர்ந்து வரும் கண்ணீர்

லஞ்சையின்றி நான் கேட்டேன்
வஞ்சி உனை மணக்க!
பஞ்சை என்று கூறிவிட்டார்!
படபடப்பு மிக்கவராய்
இஞ்சித்தும் எண்ணாதே
கீழான் எண்ணமென்றார்!

நெஞ்சத்துள் நாம்வளர்த்த
நீங்காத காதலினை,

கொன்றுவிட்டார் உன் தந்தை
சென்றுவிட்டார் என்றாலும்
நின்றுவிட்டேன் நெடுஞ்சிலையாய்
நின்றுவிட்டேன் நெடுநேரம்!
அன்று கிளம்பினவன்
ஆறாத புண்ணுடனே,
ஒன்றும் தோன்றாது
ஊரெல்லாம் சுற்றிவரேன்!

எங்கே நான், போனாலும்
என் நினைவு உன்னிடத்தில்!
மங்காத ஓவியமே!
மாசற்ற காவியமே!!
ஓங்காது நம் காதல்
ஓங்காது என்றாலும்,
நீங்காத உன் நினைவு
தூங்காது! தூங்காது!!

கடிதம் 3.

**அவள் :**

மாற்று மடல் கண்டேன்
மன்னித்து விடுங்களத்தான்!
ஊற்றுப்போல் பெருகிவரும்
உங்கள் உள்ளத்து அன்புகண்டேன்
சீற்றத்து எல்லையிலே
வீற்றிருந்த என்தந்தை,
நேற்றுத் தம் முடிவை
மாற்றிவிட்டார் உண்மையத்தான்

காய்ந்துவிட்ட அவர் நெஞ்சை
கண்ணீரால் நான் நினைத்தேன்!
மாய்ந்துவிட்ட நம் காதல்
மறுமலர்ச்சி பெற்றுவிடும்!
ஓய்ந்துவிட்ட உணர்ச்சிகளும்
உற்சாக பெருவளியில்,
பாய்ந்து விளையாடி
பரவசத்தின் எல்லைகாண,
ஆய்ந்தோய்ந்து பாராதீர்
அவசரமாய் வாருமத்தான்!

கடிதம் 4.


**அவன் :**

தவழ்ந்து வரும் தென்றல்
தந்து சென்ற செய்தியினால்,
தவழ்ந்துவரும் எதிர்காலம்
தனிச்சிறப்பு பெற்றிருக்கும்!
தவழ்ந்துவரும் குழந்தைபோல்
தத்தளிக்கும் உன் அன்பு
தவழ்ந்து வந்து என்நெஞ்சை
தழுவிவிட்டதென் அன்பே!

காசற்ற எனக்கு
கன்னிகை உனைத்தரவும்
மாசற்ற உன் தந்தை
மனமுவந்து விட்டதனால்,
பாசமுடன் அவர் நாமம்
பல்லாண்டு வாழ்த்திடுவோம்!
நேசமிக்க நம்காதல்
நிலைத்துவிட்டதென் அன்பே!

மண்ணில் காலின்றி
விண்ணில் பறப்பதுபோல்,
கண்ணில் நீபடும் வரை
கண்ணுறங்க நான்மாட்டேன்'
வேண்டாம்னி ச்செய்தி
விரைவில் நான் வந்திடுவேன்!

சா. ராமாநுசம்



## உலக விடுதலைக்கு வழி என்ன?

கடவுள் என்ற வார்த்தையே முதலில் ஒழிய வேண்டும். அதுதான் அதற்குகந்த வழி.

—சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலர், பி. ஏ., பி எல்.

# எழுச்சிமிகு திராவிடத்தில் விழிப்புற்ற தொழிலாளர்!

வில்லவன்கோதை, கலையம்புத்தூர்

●

வளர்ந்து வரும் மனிதகுலம் தனது பல்வேறு உரிமைகளை அடைய, தான் கண்ட அமைப்புகளில் தொழிற் சங்க இயக்கமும் ஒன்றாகும். தொழிற் சங்க இயக்கம் மேலை நாடுகளில் ஏறக்குறைய 17-ம் நூற்றாண்டிலேயே இயங்கிக் கொண்டிருந்தாலும் வர்க்க அடிப்படையில் தனது கொள்கையை வகுத்துக் கொண்டு இயங்க ஆரம்பித்ததெல்லாம் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான். இந்திய துணைகண்டத்தைப் பொறுத்தவரையில் 1918-20-ம் ஆண்டுகளில்தான் தொழிற் சங்க இயக்கம் ஆரம்பம் எனலாம். தொழிற் பெருக்கத்துக்கான யந்திரப் பொறிகள் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியானது போலவே 'தொழிலாளர் பிரச்சனையும்' தொழிற் சங்க இயக்கமும், ஐரோப்பிய பாணியிலேயே வளர்ந்தது அந்த நேரத்தில்.

இந்தியத் துணைக்கண்ட அரசியல் விடுதலைக் கிளர்ச்சியின்போது தேசிய காங்கிரஸ் தனக்கு பக்கபலமாக 'ஆங்காங்கு தொழிற்சங்கங்கள் ஆரம்பித்து நடத்தியது என்றாலும் 1917-ம் ஆண்டில் ருஷ்யாவில் சோவியத்துக்கள் அடைந்த வெற்றியும் ஏற்கனவே ஐரோப்பாவில் பிரச்சாரமாகிக் கொண்டிருந்த 'வர்க்க' உணர்வும் தொழிற் சங்கங்களில் பொதுவுடமையினர் பெரிதும் இடமபெறவும் தங்கள் கட்சி கொள்கைகளைப் புகுத்தி ஆதிக்கமும் கொண்டனர். இந்நிலையில் தேசியவாதிகளென்போர் சிறிது பின்வாங்கவும் நேர்ந்தது.

சமார் 1944, 194-ம் ஆண்டில் சமதர்ம கட்சியினர் தாங்களும் தொழிலாளர்களுக்கு சேவை செய்வோரும் என்று ஹிந்து மஜதூர் சபா என்பதாக ஓர் தொழிற்சங்க இயக்கம் ஆரம்பித்து நடத்தி வருகின்றனர். இந்த அமைப்பும் 'அதுக்கு இதுவைப், புளிப்பில் ஆவுங்க அப்பன்' என்பதாக தமிழிலே தொன்மொழியுண்டே அதை இன்மொழியாகக் காட்டுகின்றது. 'வர்க்க' அடிப்படை வழுவாமல்தான் நடத்துகின்றனர். இன்று 'சோஷியலிஸம்' நாளை 'காந்தியம்' மறுநாள் சாந்திய சோஷியலிசம் நான்காம் நாள் தர்மகர்த்தா சோஷியலிசம் என்பதாகக் கட்சிக் கொள்கைக் கேற்ப தொழிற் சங்கத்தையும் பயன்படுத்தி நடத்துகின்றனர்.

இந்தியா சுதந்திரமடைந்தபின், தேசிய காங்கிரசின் தொடர்ச்சிக் கொள்கையான பல்வேறுபட்ட குழுவினையும் தன்பிடிப்பில் வைத்திருப்பது என்பதற்கிணங்க மீண்டும் தொழிற்சங்கம் ஆரம்பித்தது. இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (I N T U C.) என்பதான ஓர் அமைப்பை ஏற்படுத்தி தொழிலாளர்கள் சேவை என்பதன் பேரால் தொழிலாளர்களை தன்பிடிபபில் வைத்திருக்கிறது இப்படி துணைக்கண்ட முழுதமுள்ள தொழிலாளர்களை 'வர்க்கம்' என்ற பெயரால் பிரித்து ஒவ்வோர் அரசியல் கட்சிகளும் பயன்படுத்தி வருகிற நேரத்தில் தென்னாட்டிலுள்ள தொழிலாளர் நிலையும் அப்படித்தானிருக்கிறது.

திராவிடத்தைப் பொறுத்தவரையில் இன்று வர்க்கமாக பிரிந்து நின்ற தொழிலாளர் மத்தியிலும் விழிப்புணர்வு காணப்படுகிறது தென்னகத்தின் விடுதலை இயக்கமாம் திராவிடரியக்கம் இதுவரும் வற்புறுத்தி வந்த கொள்கைகள் வெற்றி பெறுகின்றது.

'வர்க்கமாகப் பிரிந்து பாட்டாளிகள் இதுவரை தாங்கள் கண்ட பலனை கணக்கிலெடுக்கின்றனர். அந்தக் கணக்கிலே வருகிற லாபத்தில் சிறிது—ஆந்திர கேசரி நம்மாநில முதலமைச்சர் பதவியிலிருந்தபோது ஆரம்ப ஆசிரியர்கள் தங்கள் அல்லல் பேசச் சென்றனர் அமைச்சரைப் பேட்டிகாண. பேட்டி தந்த பிரகாசம் கூறினர், நீங்கள் பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் கூலிகளைப்போல் வந்திருப்பது குறித்து வருந்துகிறேன்—கூலிகளைக் கண்டாலே வருந்துகின்றனராம் நாடாள்வோர்.

தேர்தல் காலத்திலே குப்பை மேட்டிலிருக்கும் குப்பனை உப்பரிக்கையில் வைப்போம் என்றனர். அந்த குலகன்றிறக்கும் கற்றோர்கள் காணச்சென்றபொழுது உப்பரிகையில் நின்று கொண்டு செப்பினர் அமைச்சர் 'கூலிகளைபோல' என்று ஏான தொழிலில் இவ்வாறு மக்களிலிருந்தே பிரிக்கப்பட்டு தனிமைப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்த தொழிலாளர்கள்' எல்லோருக்கும் எல்லாம் என்பதான இடம் நோக்கிச் செல்கின்ற திறந்த வையம் என்ற குரல் வரும் பக்கம் தன் பார்வையை திருப்புகின்றனர்.

நீ ஆசியிலே நூல் நூற்பவனு, பாதை அமைக்கும் பாட்டாளியா, அரசினர் பணிமனையின் அலுவலரா. எத்தனையுண்டோ தென்னகத்தில் அத்தனை தொழில் செய்வோரும்: ஒரே மொழி ஒரே பண்பு, ஆக ஒன்றே குலமென்று முழங்கி குடியரசு திராவிடத்தனி அரசு என்று முழங்கி: அந்த எழுச்சி மிகு ஒலியுடன் தென்னகத்தின் ஆலைகளிலே எக்காள நடைபோடும் ஏறுகள் தான் 'திராவிடத் தொழிலாளர்கள்' இன எழுச்சி கொண்ட சீயங்கள் இதோ! நாட்டு விடுதலைப் படையில் முன்னணியில் முழக்கின்றனர் விழிப்புற்ற திராவிடனே! எழுச்சிக் கொள்!! மேதினிபோற்று மேன்மையுறு செயலாம் திராவிட நாடு திராவிடருக்காக புறப்படு! அத் திருவிடத்தில் மேதின விழாவின் அடிப்படைக்கொள்கை தலைசிறந்து நிற்கும் ஆட்சி முறையை வகுப்போம்.

---

# நாட்டுப் பிரிவினையைப் பற்றி!

இலங்கையின் அரசியல் நிகழ்ச்சிகளைக் காணும்போது உண்மையிலே நல்லெண்ணம் கொண்டோர் மகிழ்வர்!

இலங்கை இந்தியர் பிரச்னையைத் தவிர! இவர்கள் செயல்களை யாரும் வெறுப்பதற்கில்லை!

சின்னஞ்சிறு நாடு! பாண்டுங் மாநாட்டில் கலந்து கொண்டது!

உலக நாடுகளின் உரிமையை காப்பாற்ற சமாதானம் நிலவ திட்டப்படும் திட்டங்களில் இலங்கை அரசாங்கமும் கலந்துப் பேசுகிறது!

உலகில் சமாதானம் நிலவ வேண்டும் என்று நாமும் அவர்களைவிட கொஞ்சம் அதிகமாகக் கூறுகிறோம்! நமது கொள்கையே கட்டுப்பாடு, கண்ணியத்தில்தானே அமைந்திருக்கிறது!

இந்த சிறுதீவு! 85 லட்சம் மக்களை கொண்ட சின்னஞ்சிறு நாடு, இந்தோனிஷியாவில் நடைபெறும் மாநாட்டில் தனது தாயகக் கொடியை பறக்க விடுகிறது! அவர்களது நிலையையும் அங்கு வந்து தெரிவிக்கிறது!

அவ்வளவு சின்னஞ்சிறு நாட்டில் ஓர் புதிய பிரச்னை எழுகிறது! இலங்கையில் வாழக்கூடிய தமிழர்களின் சுயமரியாதை காப்பாற்றப்படல் வேண்டும். அவர்கள், மொழி; கலாச்சாரம், பண்பாடு மறையாமல் வாழ வழிசெய்ய வேண்டும்! அவர்கள் மாகாணங்களை அவர்களே அரசாட்சிசெய்ய உரிமை வேண்டும்! என்று ஓர் குரல் எழும்புகிறது இலங்கை தமிழரசுக் கட்சி! சமீபத்தில் நடைபெற்ற மூன்ருவது மாநாட்டில்!

இலங்கை சார்பில் பாண்டுங்கில் நடைபெறும் மநாட்டில் கலந்து உலக அரசியலை கவனிக்க சென்றுள்ளார்கள். ஆனல் உள்நாட்டில், தனது இனமக்கள் அவல நிலைக்கு ஆளாகி, செத்து மடிந்துவிடும் நிலையிலிருக்கிருர்கள். அவர்களது இந்த நிலை மாற வேண்டும் என அறைகூவி இங்குள்ள தமிழர்களை அழைத்து, அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுகின்றனர்! தமிழ் மாகாணம் தனிஆட்சியாக்கப்படவேண்டுமென்று!

சின்னஞ்சிறு நாட்டில், 85 லட்சம் மக்களைக் கொண்ட இலங்கையிலே, இன வளர்ச்சி ஏற்பட்டு வருவதை தமிழகத்தில் சிக்கி முக்காடி தன்நிலைமாறி தவிக்கும் பாரத வீரர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்!

பாண்டுங் மாநாட்டில் எங்கள் பாரதப் பிரதமரும் செல்கிருர்! சமாதான தீபத்தை அங்கு ஏற்றி வைப்பார், என்று பெருமை படக் கூறும் பாரத வீரர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்! இலங்கையில் ஏற்பட்ட இனஉணர்ச்சியை மறந்து விடாமல் எண்ணிப் பார்த்து நினையுங்கள்!

அங்கே பேசப்படுமா, அல்லல்படும் திராவிடர் துயர்! உலக சமாதானம் பற்றியல்லவா அவர்கள் பேசுகிருர்கள். அவர்களுக்கு இது ஓர் சிறு பிரச்னையாக தெரியலாம்! பிரதமர் நேருவிற்கோ, சிறுபிள்ளைத்தனமானது என்று தோன்றலாம். நமக்குத் தெரிகிறது! தாயகம்விட்டு, வேறகம்சென்று வேதனைபடும் நம்இன சகோதரர்களின் வேதனைச் செய்தி!

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் ஆதிக்க வெறியினரின் அடக்குமுறைக்கு பலியாகி அடிமைப்பட்ட இனமக்கள் வீறிட்டு எழுந்தபோது அந்த ஆதிக்கபுரியினரின் விலா எலும்பை முறித்து தன் தாயகத்தின் விடுதலைக் கொடியினை நாட்டியதை! சரித்திரம் தரும் உண்மையாகயிருக்கிறது!

இந்நிலையில் உரிமையிழந்த நம் திராவிடர்கள் நாட்டுப் பிரிவினை கேட்பதிலே என்ன தவறு?

மதிப்பிற்குரிய காமராசருக்கு தெரிவிக்க வேண்டுகிறோம். வடநாடு, தென்னடு என்று பிரிவினை மட்டும் அல்ல நாங்கள் கூறுவது! வீழ்ந்த இனத்தின் எழுச்சி முழக்கம்! இது தவறு?

இத்தனையேன்? இலங்கை வாழ் தமிழர்கள்! அவர்கள் அவதிப்படும் நேரம், தென்னடு, வடநாடு அன்று பேதமில்லாமல் இந்த நேரு சர்க்கார் 'ஆவடி மாதிரி சோஷலிசத்தினர்' என்ன செய்தனர்!

இலங்கையில் எழுந்த தீர்மானங்களை எல்லாம் ஒதுக்கி விட்டனரே! இங்கு அதிகமாக வசிப்பவர்கள் தென்னட்டவர்களே, குறிப்பாக தமிழர்கள். எனவே இங்கு நியமிக்கும் தூதுவரையும் ஓர் தமிழராக நியமியுங்கள் என்று அத்தனை தீர்மானங்கள் வேண்டுகோள்கள் விடுவிக்கப்பட்டன? செய்தனரா ஆகஸ்டு தியாகிகள்! தமிழர்தான் நாங்கள் கேட்டோம். வந்தது சக்ரவர்த்தி அல்லவா? இங்கும் இந்திய பொதுமொழி வளர்ந்து விட்டது என்ற எண்ணம் போலும்!

எனவே...இம்மாதிரியான முக்கியமான நிகழ்ச்சிகளிலே யெல்லாம் தமிழ் நாட்டார் தென்னட்டார் ஒதுக்கப்படுகின்றனரே! இப்படியே நாள் சென்று கொண்டிருந்தால்... கடைசியில் தமிழர் என்று யாராவது கூறினல், அதனை வெங்கலபாத்திர கடையில் போய்ப் பார்! என்ற நிலைதானே ஏற்படும்! என்பதை எண்ணிப்பாருங்கள். அன்பு காங்கிரஸ் தோழர்களே! இதுவா வடநாட்டு துவேஷம்? சின்னஞ்சிறு இலங்கையில் தமிழ்மொழியாளர், நசுங்கி விடுவர் என்று அவர்கள் வாழ்வில் அக்கரை கொண்டு இங்குள்ளவர்கள் அவர்களின்......(தமிழரின்) நலனை கருதிப் போராடுகிருர்கள் என்ருல்... தென்னட்டில்உள்ள நாம் நாட்டுப்பிரிவினை கேட்பதில் என்ன தவறு?

இதுநாள்வரை கருத்திலும் கரங்களிலும் மாட்டப்பட்டிருந்த அடிமை சங்கிலி அறுபட்டு விழுந்துவிட்டதை அறியவேண்டும். இது நம் நாடு! பொன்னுனு நாடு! இயற்கை வளம் நிறம்பிய நாடு, இங்கு ஜாதி வெறிகிடையாது! மதவெறியும் கிடையாது! உயர்ந்தவன் தாழ்ந்தவன என்றும் கிடையாது! பொருளாதார பேதம் கிடையாது! வடநாட்டு சுரண்டல் கூடாது! மானம் வேண்டும் எங்களுக்கு! உரிமைவேண்டும் என்று கூறி விழித்துவிட்டனர் மக்கள்! இதுதான் இன்று லட்சோப லட்ச மக்களின் இதய கீதம்!

வீழ்ச்சியுற்ற இனத்தை எழுச்சி பெற செய்து விட்டோம், என்ற வெற்றிப்பாதையில் நடக்கின்றனர்! அந்த பயணத்தை தடுக்கவும் முடியாது! அவர்கள் வெற்றியை கெடுக்கவும் முடியாது! அவர்கள் விழிப்புற்று விட்டனர்! இனி ஏமாறமாட்டார்கள்!

இனியும் வடநாடு, தென்னடு என்று கூறும் பிரிவினைக்காரர்கள். துவேஷிகள் என்று வுரட்டுவாதம் கூறி ஏமாற்றமுடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

—வி. எஸ். [illegible]ன், இலங்கை

# க ன வு !?

மா. தங்கவேலர்

## முன்னுரை

கனவு—கற்பனைக் கோர்வை! நினைக்கும் போதே நெஞ்சிலே தேனைத் தடவும் பூரிப்புக் காட்சி. முல்லைக் காட்டுக்குப் போக வேண்டுமென்பது வெறும் ஆசை அளவுடனேயே நிற்கிறது. ஆசைக்குத் தடை...மலைபோன்ற தொல்லைகள்! தொல்லைகளை சகித்துக் கொண்டால் அதோ முறுவல் பூக்கும் முல்லைக் காடேதான்!

கனவு......ஆச்சரியக் குறிக்குப் பக்கத்திலே கேள்விக்குறியும் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஏன்?...அன்று 'சிகாகோ' உரிமை முழக்கம் கிளம்பியபோது இப்படித்தான் ஆச்சரியத்திலே துவங்கி......கேள்விக் குறியாக வளர்ந்தது. அதுபோலத்தான் இந்தக் 'கனவு' புதுமையின் நிழலாகிறது. புதுமை மலர்வது தானே புரட்சிக் காலம். கனவு நினைவானால் அது உண்மை புரட்சிக் காலமேதான்!

*

## பூங்காவனம்

கண் விழித்தேன்! காரிருள் இன்னும் விலகவில்லை. இன்ப நினைவுகள் என்னைத் தூங்கவிடாமலேயே அடித்து விட்டன. புரண்டு கொண்டிருந்தேன் — புதுச்சேதிதந்த பூரிப்போடு நான் படுத்திருந்த கனகமணிக் கட்டிலை ஒருமுறை பார்த்தேன். மாளிகைச் சுவர்களைப் பார்த்தேன். ஏன்...என்னையே ஒருமுறை அகலக் கண்களை விரித்துப் பார்த்துக் கொண்டேன். சீமானும்—சிங்காரியும் சிரித்துப் பேசி சரசமாடும் ஊஞ்சலான அந்தக் கட்டில் அமைதியே உருவெடுத்த நான் புரளுவதைக்கண்டு அசந்துதான் போயிருக்கும். கட்டிலிலே மலர்ச்சரம் கொஞ்சவில்லை. இரவிலே இனிய மணந்தந்து, காலையிலே கசங்கிடும் அந்தக் கசங்கிய மலர்க் குவியல் இங்கே இல்லவேயில்லை! பாலோடு துணைவந்த பழத்தட்டும் அதை இணைந்து அணைந்து தூக்கி வரும் பாங்கியருமில்லை. போதைப் பேச்சும் நாச நாட்டியமுமில்லை இங்கே! இதோ பளிங்குத் தரை பார்ப்போரின் முகத்துக்குக் கண்ணாடியாகிறது. இந்த மாளிகை பளபளப்பு அதிகமா—இல்லை, மயில் நடை மாதரசியின் மேமனி ஜொலிப்பு அதிகமா என்று 'எடை' போட்டுப் பார்க்கும் சீமானுமில்லை.

அவர்களெல்லாம் எங்கே? இக வாழ்வு போதும்—இறைவனின் மகத்தான திருப்பாதம் தேடுவோமென்று சுகபோகம் மறந்து இமயம் நோக்கி நடை கட்டிவிட்டார்களா? இல்லை இன்பத்தின் எல்லை கண்டுவிட்டோம் இனி எதற்கு 'நர' வாழ்வு என்று முடிவு கட்டி விட்டனரா?... 'நேற்று' அவர்கள் நடாத்திய 'ஜபார்'தஸ்தை மறந்திருக்க முடியாதே! தெருநாய் எழுவதற்கும் முன்னதாகவே எழுந்து அதிகார ஓலமிடும் அந்தஅரும்பணி யாருக்குக் கிடைக்கக் கூடியது. காலை மலர்வதற்கும் முன்னே அந்த மிராசுப்புலி கண்மலர்ந்து கணீர் கணீரெனக் கொடுக்கும் குரலோசை இன்னும் என் காதுகளிலே ஒலித்துக் கொண்டுதானே இருக்கிறது.

'...டேய்! பூங்கா...எழுந்திருடா முதலியார் சாப்பாடு உன்னைத் தாலாட்டுப்பாடி தூங்கவைக்குது. சீ! கழுதை எழுந்துபோயி மாடுகளுக்குத் தண்ணி காட்டிட்டு; நாய்களை சோப்புப் போட்டு குளிப்பாட்டிட்டு, பூந்தோட்டத்தை யெல்லாம் ஒரு பார்வை பார்த்துட்டு; ஒரே நொடியிலே அறை யெல்லாம் கூட்டி அதது இருந்த இடத்திலே வச்சிட்டு...மாடியிலே அம்மாவையும் எழுப்பி விட்டுடு! அம்மாவே எழுப்பி விட்டுட்டு அவுங்க பாத்ரூமிலே சோப்பு, சீப்பு, டவல்லாம் எடுத்து வைடா! நேத்திக் காட்டம் அவள் குளிச்சிண்டிருக்கப்ப மறந்திருந்து எடுத்துப் போகாதேடா! போடா போ சீக்கிரம் போ 'அம்மா' புரளுற சத்தங் கேட்குது!

...அந்த பயங்கரக் கட்டளை—இன்றுகூடக் கேட்டுக்கொண்டே தானிருக்கிறது! அப்பப்பா அந்த பாயும் புலிகள் எப்படித்தான் தங்களது வெறிக் குணத்தை மறந்தனரோ?

நேற்று மாட்டுக் கொட்டடியிலே அமர்ந்திருந்தேன். 'டே பூங்கா' என்ற முதலியாரின் குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்தேன். இரண்டாவது தடவையாக குரல் கொடுக்கும்போது 'பூங்கா' என்று அன்பாக அழைத்தார். அந்தக் குரலோசையிலே வாஞ்சை கப்பியிருந்தது.

...பூங்கா மனுஷனுகிட்டேம்பா உலகச் சொத்துக்கு நீதானப்பா சொந்தக்காரன். காலத்தின் இருளைப் புது ஒளி தேய்த்துவிட்டது. இனி நானும் உன்னைப் போன்றவன்தான். உழைப்பிலே நானும் பங்கு கொள்வேன். நித்தநித்தம் உழைத்துச் செத்த இந்த பங்களாவிலே பங்குண்டு பூங்கா!

...அந்த அன்புக் குரல் இன்னும் தேயவேயில்லை. எனக்கும் வாழ்வு! இப்படி எண்ணிப் பார்க்கும் போதே இன்பங் கூத்தாடுகிறது இதயத்திலே! தர்பார் பாடியவர்களெல்லாம் தலை குனிந்து வந்து விட்டார்களே! தர்பாருக்கு மதிப்பில்லையா? தங்க முடி தாங்கிகள் அங்கமெல்லாம் குளிர வைக்கும் செய்தி தந்தனரே! புது வாழ்வு தந்தவர்களே!... நீங்களும் வாழுங்கள், வாழுங்கள்!

*

## முல்லை

ஆமாம் அவர்கள்—அந்த நல்லவர்கள் வாழத்தான் வேண்டும். இரும்புக் கதவு திறந்தது. வேலி அறுந்தது. புது வாழ்வுப் பிறந்தது. அவர் என் கணவர் இதோ பூரித்திருக்கிறார் என்னைவிட பல மடங்கு. உழைத்து உழைத்து நித்த நித்தஞ் செத்தவர்களல்லவா நாங்கள். கல் பாதையில் நடந்து வந்தவனுக்குத்தானே கண்ணாடித் தரையின் அருமை தெரியும். செந்நீரைக் காணிக்கையாக்கினோம் உலகுக்கு. உலகின் பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டிருந்தோரின் கைப்பாவைகளாகியிருந்தோம். கண்ணீர் விட்ட இரவுகளுக்குக் கணக்கேது? உழைத்த அலுப்போடு கை சோர்ந்து கால் தளர்ந்து அவர் வர ஏதுமிலா பானையைக் காட்டுவேன். இதயக் குமுறலைக் காட்டுவேன். ஆற்றாது அழுகும் கண்ணீர்தானே எங்களது சமய சஞ்சீவி.

புதுப்பானை பொங்கவில்லை... பொங்கிற்று கண்ணீர். பார்க்குமிடமெல்லாம் பச்சை வயல். வயலெல்லாம் ஆடிச் சிரிக்கும் கதிர்க் கூட்டம்: கதியில்லாத எங்களைப் பார்த்து சிரிக்கத்தான் அதற்கு நேரமிருந்தது. 'என்னை வளர்த்தவனே! நீ வாடுகிறாய்: ஏனப்பா ஊருக்கு உழைத்து உழைத்து ஓடாகத் தேய்கிறாய்' என்றுதான் பாடிப் பாடிக் கூறியது. அந்த இருண்ட காலமெல்லாம் இப்போது தேய்ந்த கனவாக-நடந்த கதையாகி வருகிறது.

புதுவாழ்வு தந்து விட்டார்கள் புலிக்காட்டுப் பூமான்கள். சீமான்கள் போட்ட சிக்குகள் அறுந்து விட்டன. கூண்டு திறந்து விட்டது. கொடுமை தந்தோர் கூண்டு வாழ்வை உணர்ந்தனரோ என்னவோ? எது எப்படியிருந்தாலும் வாழ்வு வானத்திலே நம்பிக்கை நட்சத்திரம் தோன்றி விட்டது. தேன் நிலவு நமக்கு. நாம் சமைத்த உலகம் நமக்கே ஆகி விட்டது. புன்னகைப் புலிகளும், சுயநல நரிகளும் எங்கோ? பூக்காடு கண்டு விட்டோம் சாக்காட்டுத் தொல்லை தாண்டி, வேதனைக்குப்பின் புதுமலர்ச்சி...புயலுக்குப் பின் அமைதிபோல!

*

## செந்தாமரை

நானோ முதலியார் வகுப்பு. மாளிகைச் சொந்தக்காரி. ஊரார் புகழ் பாடினர் எங்கள் குடும்பத்தைப்பற்றி. கௌரவ ஊஞ்சலிலே நாங்கள் ஆடினோம். காருண்டு மாடலுக்கு ஒன்றாக: சிறு ஊர் போல பங்களா உண்டு எடுபிடிகளோ ஆயிரமாயிரம். அவர்களிலே ஒருவர்தான் பூங்காவனம். பூங்காவனம்—நம்பிக்கையின் பிரதிபிம்பம். கடிகாரங்கூட சில நேரங்களிலே நின்றுவிடும்... பூங்காவனமோ ஓயாது உழைத்தார். நிலவு சிரிக்கும் இரவும்—கனல் கக்கும் பகலும் அவருக்கு ஒன்றேதான். அந்த நல்ல உள்ளத்தின் அன்பு ராணி முல்லை. முல்லையும்—பூங்காவும் பெற்றெடுத்த அன்புச் செல்வம்தான்—குலவிளக்கு 'நல்லமுது'. நல்லமுது என் இதய ராஜா என் வாழ்வு கானத்துக்கு இன்பச் சுவை சேர்க்கும் புதுவீணை. அந்தச் சொல்லழகரை பார்வையால் பாசவலை வீசியவரை கௌரவ ஊஞ்சலில் ஆடுவதை நினைத்து மறந்துவிட முடியுமா? குலபேதம் கோரக்கரம் நீட்டியது. ஆண்டான்--அடிமை பேதம் எங்களிடையே பயங்கரப் பள்ளத்தை வெட்டியது. என்றாலுமென்ன... சிக்குகளுக்கிடையேதானே காதல் மலர்கிறது. வேதனை வேலி அறுந்துவிடும் புதுவாழ்வு — பிறந்துவிடுமென்றுதான் காலத்துக்குக் காத்திருந்தேன். அந்த நாள்...இன்ப நாள் இதோ மலரும் நிலையில். சாதி அரக்கன் இதோ செத்துவிட்டான். சமதர்ம ஒளி அதோ அகிலமெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது. என் உள்ளம்போல எங்கும் இன்பமயம். புவியெலாம் புதுச் சுவை...இந்தப் பொற்ககாலம் வாழ்க...வாழ்க!

*

## முடிவுரை

கற்பனைக் கோர்வை இடையிலேயே அறுந்துவிட்டது...காரணம் பூரிப்பேதான். நம்மில் பலர் பூரிப்புச் சேதி கேட்கும்போது பேசமுடியாதவர்களாகி விடுகிறோமே அதுபோலத்தான். புதுச் சேதியின் சுவை...கற்பனைக்கோர்வையை இடையே அறுத்துவிட்டது. அறுந்த தொடர்ச்சி உங்களுக்கென்ன புரியாததா? இதோ நீங்களுந்தான் கற்பனை செய்யப் போகிறீர்கள். இடையேநானேன் தடை!

*


## ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோணித போஷிப்பையும் திரும்பவும் பெற விரும்பினால் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40—நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னாருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எங்க மருந்தினாலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை சாப்பிடக்கூடிய லேகியம்
டப்பி 1-க்கு விலை ரூபா 3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன் 1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்
டப்பி 1-க்கு விலை ரூ. 6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன் 1—11—0

### என். பி. செல்வம் & கோ.

16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

# நாசிர்

●

கூட்டுத்தமாதவாக்கில் எகிப்து பிரதமர் லெப்டினண்ட் கர்னல் ஜமால் அப்துல் நாஸிர் அவர்கள் நம் இந்தியாவிற்கு வருகை தந்தார். தற்போது பாண்டங்கில் நடைபெறும் ஆஃப்ரோ—ஆசியா மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார். இம்மாநாட்டில் எகிப்து பங்கெடுத்துக் கொள்வது வரலாற்றுத்தக்கதாகும். ஏனெனில் இதுவரை ஆசிய—அரசியல் விவகாரங்களில் தலையிடாது தனித்து நின்ற எகிப்து இப்பொழுதுதான் ஆசியாவோடு இணையப் பெறுகிறது. பாண்டங்கில் கூடும் 29 ஆஃப்ரிக்கா—ஆசியா நாடுகளில் எகிப்தும் முக்கியத்துவம் பெறுகிறது.

எகிப்து நாட்டிற்கு விடுதலை, சமீபத்தில்தான் அதாவது ஜூலை 23, 1952–ல் கிடைத்தது. அவ்விடுதலை அற்புதத்திலும் அற்புதமாய், புரட்சியிலும் புரட்சியுமாய் மலர்ந்தது.

'கத்தியின்றி இரத்தமின்றி' பரூக் மன்னன் இரவோடு இரவாக ஓட்டம் பிடித்து எகிப்தை ஜெனரல் நஜீப் பிடியில்விட்டு ரோமாபுரி போய்ச் சேர்ந்தான். நஜீபின் புகழ் உலகெங்கணும் பரவியது. நஜீப்பிற்கு உறுதுணையாய் உள்நின்று அரியபெரிய சாதனைகள் செய்த நாஸிரின் புகழும் துலங்கிற்று,

வெள்ளையர் கைப்பாவையாம் பரூக் மன்னனது ஆட்சி வீழ்ச்சியுற்றது, பரூக் மன்னனின் வெளியேற்றம் எகிப்து மக்களுக்கு "விடிவெள்ளி"யாய் அமைந்தது!

எகிப்தின் விடுதலைக் கர்த்தாவாக நாஸிரைத்தான் கூறவேண்டி வருகிறது. எவ்வாறெனின் தக்க தருணத்தில் ஜெனரல் நாஜீபைப் பார்த்து "இனி பொறுக்க முடியாது! கொடுங்கோல் மன்னன் பரூக்கின் கொடுமை போதும்! நம் புரட்சிப் படைக்குத் தலைமை தாங்கி மக்களாட்சியை மலரச் செய்ய போகிறீரா? அல்லது உங்களையே கைது செய்து மேலால் செல்லலாமா? இரண்டிலொன்று! முன் வைத்த காலை பின் வைக்கப்போவதில்லை! என்ன சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டார் நாஸிர்,

புரட்சி பூத்தது மன்னன் முடிதுறந்து ஓடினான். மக்களாட்சி மலர்ந்தது!

புரட்சிக்குப் பிறகு ஜூன் 18, 1953–ல் எகிப்து குடியரசு நாடாகத் திகழ்ந்தது! அக்குடியரசின், முதல் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் ஜெனரல் நஜீப் அமர்ந்தார்.

குடியரசு என்று கூறிய போதிலும் ராணுவ ஆட்சியேதான் நடந்து வந்தது. இன்றும் அப்படியேதானுள்ளது. இத்தகைய ஆட்சியை சர்வாதிகார ஆட்சி என்றழைக்கப்பட்ட போதிலும் தனிப்பட்டவருடைய சர்வாதிகாரமின்றி ஒரு ராணுவ கூட்டுச் சபையின் ஆட்சியாகவே விளங்குகிறது,

பற்பல உள்நாட்டு சங்கங்கள் உடைக்கப்பட்டன. பத்திரிகைப் பரிசீலனை பலமுடன் நடத்தப்பட்டது. இலஞ்சம் கொடுக்கல் வாங்கல் தலை தெறிக்க விரட்டப்பட்டது. சலுகையின் அட்டூழியங்கள் அகற்றப்பட்டன. நாட்டு நலமே பெரிதெனக் கருதி அனைவரும் உழைத்திட்டார்கள்.

இடையில் ஏனோ ஜெனரல் நஜீப்புக்கும் நாஸிருக்கும் கருத்து வேற்றுமை தோன்றிவிட்டது.

மக்களிடையே தேர்தலை நடத்தி உண்மையான மக்களாட்சியை உருவாக்கி மக்கள் மன்றம் அமைக்க ஜெனரல் நஜீப் விரும்பினார்.

ஆனால் நாஸிரும் அவரைச் சேர்ந்த சகாக்களும் அதிகாரம் தம் கையிலேயே இருக்க வேண்டும் என்றார்கள்,

கருத்து வேற்றுமை முற்றியதின் விளைவு ஜெனரல் நஜீப் ராஜினாமா செய்ய வேண்டி வந்தது. விலகியும் விட்டார். உடனே நாட்டில் ஒரே அமளி கொந்தளிப்பு! ஏனைய உலகமும் வியந்தே நின்றது.

பிறகு ஏதோ ஒருவித சமரசத்தில் மீண்டும் ஜெனரல் நஜீப் ஜனாதிபதியாகவும் நாஸிர் பிரதமராகவும் இருக்கச் சம்மதித்தார்கள். பூர்சமயர்தான் எகிப்தியரது வழக்கப்படி மூக்கோடு மூக்குராய்ந்துத் தழுவி முகமன் கூறிக்கொண்டார்கள்.

ஆனால் சிறிது காலத்திற்குள் மீண்டும் நஜீப்புக்கும் நாஸிருக்கும் மீண்டும் பூசைச்சல் எழும்பியது. ஆனால் அரசியல் வட்டாரத்து ஆதரவு அனைத்தும் நாஸிர் வசமே சாய்ந்தது. எக்கட்சி ஆட்சியும் இல்லாது தற்போதுள்ளதுபோல் ராணுவ அதிகாரிகளின் கூட்டமைப்பு ஆட்சியே நடக்க வேண்டுமென்பதும் ஊர்ஜிதமாயிற்று. ஜெனரல் நஜீப் விரும்பிய அரசியலாட்சி ஏற்பட வாய்ப்பு கிட்டாமற்போகவே அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியும் விட்டார். விலக்கப்பட்டார் என்றுஞ் சொல்லலாம்!

ஆக நாஸிர் ஆட்சியே நிலைத்து நிற்கிறது. நாஸிர் ஆட்சியில் பல புரட்சி ஏற்பாடுகளும் உருவாயின.

எட்டு ஆண்டுகளாக இழுத்துப் பறித்துக் கொண்டிருந்த சூயஸ் கால்வாய் பிரச்னை சுமுகமாக முடிந்தது. எகிப்துக்கும் பிரிட்டனுக்கும் இடையே ஒரு உடன்படிக்கை நிறைவேறியது ஜமால் நாஸிருக்கு இது ஒரு வெற்றியாகும்!

இவ்வுடன்படிக்கையின்படி கடந்த 1856–ம் ஆண்டு முதல் எகிப்திலே இருந்து வரும் பிரிட்டிஷ் துருப்புகள் சூயஸ் கால்வாய் பிரதேசத்திலிருந்து வெளியேறியாக வேண்டும். ஆனால் அரபு நாடுகளின் மீதோ அல்லது துருக்கியின் மீதோ அன்னியர் தாக்குதல் ஆரம்பித்தால் உடனே மீண்டும் பிரிட்டிஷ் துருப்புகள் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் போர் நடவடிக்கைகளை முன்போல் துவங்கிவிடும் இந்த இடத்தில்தான் முன்னைய ஜனாதிபதி நஜீப்புக்குக் கருத்து வேற்றுமை.

அமெரிக்காவிடமிருந்து உதவித் தொகை 23 237 000 டாலர்கள் பெறும் உடன்பாட்டில் எகிப்து கையெழுத்திட்ட போதிலும், அமெரிக்கா தாளத்துக்குவிடாமல் ஆசியா—ஆப்பரிக்கா முன்னேற்றத்திற்கும் உலக சமாதானத்துக்குமே எகிப்து உழைக்கும் என்பதின் அறிகுறிதான் பாண்டங் மாநாட்டில் பங்கு கொள்வது.

120 மிலியன் (12 கோடி) டாலர்கள்போல் வரித்தொகை பாக்கியை எகிப்திய தனவந்தர்களிடமிருந்து வசூலித்தப் பெருமை நாஸிர் ஆட்சியையே சாரும்.

புரட்சிகரமான நிலச்சீர்திருத்தத்தை அமல் நடத்திக்காட்டினார் நாஸிர், அதிகபட்சம் தலைக்கு 200 ஏகருக்கு மேல் எவரும் நிலம் வைத்துக் கொள்ளக் கூடாதென்ற சட்டப்படி 620000 ஏகர் நிலத்தை நாஸிர் அரசாங்கம் கைப்பற்றி நிலமில்லாதாருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஏழைத் தொழிலாளிகளின் கூலியையும் கணிசமான அளவு உயர்த்திவிட்டது நாஸிர் ஆட்சி. வாழ்க்கைச் செலவும் 4 சதம் குறைந்தது. பரூக் மன்னனால் தடைத்து வைக்கப்பட்ட கஜானாவும் 28 மிலியன் பவுண்டுபோல் நிறைவிக்கப்பட்டதும் நாஸிர் ஆட்சியில்தான்!

இத்தகைய புரட்சியோடு கூடிய அரியபெரிய சாதனைகளைச் செய்யவல்லவர்தானென்று நாஸிரை நினைத்து கூடப் பார்த்திருக்கமாட்டார்.

நாஸிர் 1918–ம் ஆண்டு அலக்சாண்டிரியாவில் பிறந்தார். அவரது தந்தையர் குடும்பம், நடுத்தர வகுப்பைச் சேர்ந்ததாகும். தந்தை தபால் ஆபீஸ் குமாஸ்தாவாக வேலை பார்த்தவர். படிப்பில் நாஸர் கெட்டிக்காரர் என்று கூறமுடியாது. பள்ளி பருவத்திலேயே வெள்ளை ஆட்சியை விரட்டத் துடித்திருக்கிறார். மாணவர் ஆர்ப்பாட்டத்தை தலைமைதாங்கி நடத்திட்டார். தமது பதினைந்தாவது வயதிலேயே திருமணம் செய்து கொண்டார். பதினெட்டாவது வயதில் பட்டாளத்தில் புகுந்து—இரகசிய புரட்சித் தீயை மூட்டிவிட்டு—எகிப்தையே தன்வசமாக்கிக் கொண்டார். தமக்கு 36 வது வயது முடிவதற்குள் இவ்வளவும் சாதித்துவிட்டார், உலகிலேயே அவர்தான் வயதில் சிறிய பிரதமர், அவர் தற்போது உலக, அமைதிக்கும், ஒற்றுமைக்கும் பாடுபடுகிறார், வெல்க அவர்தம் முயற்சி! நிலவுக உலக அமைதி!

—டபிள்யூ. பி. டி. எழிலன்

---

# ருவண்டா உருண்டி தங்கனீக்கா!

●

அடிக்கடி கேள்விப்படாத நாடுகள் இவ்விரண்டும்! ஐரோப்பாவின் சிறுபகுதியைத் தனதாகக் கொண்டு சுயாட்சி நடத்தும் பெல்ஜிய நாட்டிற்குத் அடிமையாக்கப்பட்டிருக்கிறது,

ஐக்கிய நாட்டு பாதுகாப்புக் குழு உலகெங்கும் சுற்றி தனியாட்சி விரும்பும் நாடுகளின் ஆக்கத்திற்கு பாடுபடும் அமைப்பாக உள்ளது. அதிலே அந்நாட்டுப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். இந்தியப் பிரதிநிதியும் அதில் ஒருவராக சேர்க்கப்பட்டிருக்கிறார். அக்குழு ருவாண்ட உருண்டி——தங்கனீக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று அந்தந்த நாடுகளின் தனியாட்சிக் கோரிக்கையை ஆராய்ந்து பார்த்து இவ்விரண்டு நாடுகளும் 20–25 ஆண்டிற்குள் விடுதலை அடைய வேண்டும் என்று பெல்ஜியத்திற்கு கட்டளையிட்டிருக்கிறது!

ஐ நா. பொறுப்பாட்சிக் குழுவின் இந்தியப் பிரதிநிதியாகிய திரு. வி கே. கிருஷ்ணமேனன் அவர்கள் மேற்கண்ட கமிட்டியின் குறிப்பை வலியுறுத்தும் முகத்தான் 'பெல்ஜியத்தைச் சேர்ந்த ருவண்டா உருண்டிக்கு 20லிருந்து 25 ஆண்டிற்குள் சுயஆட்சி வழங்க வேண்டும் என்று ஐ. நா. குழு சிபாரசு செய்திருப்பது சரியே" என்று மார்ச் 22–ந் தேதியில் நியூயார்க்கில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

பெல்ஜியம் நமது திராவிடத்திலும் பலமடங்குகள் சிறியது, அதைச் சேர்ந்ததாக இருக்கிறதாம் ருவண்டாஉருண்டி? பெல்ஜியத்தையும்விட சிறியது அதனின் நிலப்பரப்பு, தங்கனீக்காவும் அப்படியே!

எனினும் அந்நாடுகள் தனிப்போக்குக்கொண்டு இயங்குவதால் அது தனி நாடாகும் உரிமை 'ஒப்புக்கொள்ளத் தக்கதே' என்று ஐ நா. குழு சிபாரசு செய்திருக்கிறது. அதில் இந்தியப் பிரதிநிதியும் உண்டு, கனம் வி. கே. கிருஷ்ண மேனன் அவர்கள் 'குழு அப்படிச் சிபார்சு செய்திருப்பது சரியே' என்று நியூயார்க்கிலே பேசுகிறார்.

திட்டம் தீட்டியதோடு விடவில்லையாம் அக்குழுவினர்! 'இன்ன தேதியில் சுதந்திரம் கொடுக்கிறோம்' என்று ஒரு தேதியும் குறிப்பிட வேண்டும் என சிபார்சு செய்திருக்கிறதாம்.

இப்படி ஊர் ஊராகச் சுற்றி சுயாட்சி விரும்பும் நாடுகளுக்காகப் பாடுபட்டுவருகிறார்கள், இக்குழுவில் வி கே. கிருஷ்ணமேனன் இந்தியப் பிரதிநிதியாக இருக்கிறார். எனவேதான் அவர்கள் கண்ட முடிவு சரியே என்று வலியுறுத்திப் பேசியும் வருகிறார்!

உலகில் சுதந்தரம் விரும்பும் நாடுகளின் நலத்திற்காக இந்தியாவும் பணியாற்றுகிறது—செயல் புரிகிறது என்று காட்ட உலகோர் உணர சுற்றிச் சுற்றி வருகிறார் இந்தியப் பிரதிநிதி! ருவண்டா உருண்டியின் சுதந்திரத்திற்கு தேதி குறிப்பிடுக என்று அச்சுறுத்துகிறார் பெல்ஜியத்தை!

இதுபோன்ற பணியை நானிலமெங்கும் செய்துவருகிறார்.

ஆனால் அவர்கள் தாய் நாட்டில்...!......!

எந்த நாட்டின் பிரதிநிதியாகச் சென்று 'ருவண்டா உருண்டி'யின் விடுதலைக்குப் பாடுபடுகிறாரோ அந்த நாட்டில் — இந்தியாவில் தனிப்பண்பு கொண்டோர் கேட்கும் நியாயமான திராவிடப் பிரிவினை மறுக்கப்படுகிறது.

விடுதலைக் கிளர்ச்சி வெற்றியுறுங் காலம் நெருங்கிவிட்டது! திராவிடம் துண்டிக்கும் காலம் அண்டிவிட்டது. ஆனால் நாட்டுத் தலைவர்களோ அதை அடக்க தயாராக நிற்கின்றனர்.

இங்கோ அடக்குகின்றனர் உரிமைக் கிளர்ச்சியை! அங்கோ அச்சுறுத்துகிறார் சுயாட்சி கொடுத்து விடும்படி. 'ருவண்டா உருண்டி' தனியாகுவதை ஆதரிக்கிறார் இந்தியப் பிரதிநிதி! அவர் நாட்டுத் தலைவர்களோ திராவிடப் பிரிவினையைக் கண்டு ஐக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்குமென்று கண்டிக்கின்றனர்.

உலகெங்கும் பலவிவர அனுப்பியிருக்கின்றனர்—சுதந்திர நாடுகளின் உரிமையை வாங்கிக் கொடுக்க! இப்படிக் காட்டி உலகில் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்கிறது இந்தியா! ஆனால் இந்தியாவிற்குள்ளோ திராவிடம் தனியாகுவதைக் கண்டு சகிக்காமல் துப்பாக்கி முனையில் அடக்கி வருகின்றார்.

உலகிற்கு நல்லவர்கள்—உள்ளுக்குள் கெட்டவர்கள். ஊருக்கு உபதேசம்புரிந்த பாதிரி தான்மாத்திரம் வீட்டில் வைதாரித்தனமாக நடந்துகொண்ட

முன் பத்தியில் பார்க்க

தைப் போல் தான் உலகுக்கு ஒருவிதமாகவும்—உள்ளுக்குள் வேறுவிதமாகவும் காட்சியளிக்கிறார்கள் நாட்டை ஆளும் 'நம்மவர்கள்.'

ருவண்டா உருண்டியன் சுயாட்சிக்கு தேதி குறிப்பிடும்படி ஆணையிடும் வேலை அங்கு, திராவிடப் பிரிவினையையோ அடக்கும்படி ஆணையிடுகிறது—இங்கு! ஊருக்கு உபதேசம்—உனக்கல்லடி' என்ற போக்கு ஒருதலைப் பட்சமானது. ஒன்றுக்கும் உதவாதது, இதனை உணர வேண்டும் ஆளவந்தோர்கள்;

ஆளவந்தார்கள் இந்நேர்மையான உரிமையை உணரும் அளவுக்கு மனவளம் பெறுவிட்டாலும், திராவிடத்தின் நல்வாழ்வை விரும்பும் ஒவ்வொருவரும், ஆளவந்தார்களுக்கு உணர்வு ஏற்படும் வகையில் உணர்ந்து நேர்மை—நீதியுடன் நடக்கும் வகையில் நாட்டுப் பிரிவினைக்குப் பணி புரிய வேண்டும். பிரிவினை பெற்ற சுதந்திர திராவிடத்தில்தான் உழைப்பவர்கள் உரிமையுடன் வாழமுடியும் என்ற உறுதியை மேதினமாகிய இன்று உறுதிகொண்டு பணியாற்றுவோமாக.

—ச. வெ. பாண்டியன்

# நல்ல முடிவு

இரா. சுந்திரம்

அண்மையில் கோவையில் கூடிய மாநில திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு பல சிறந்த முடிவுகளைச் செய்துள்ளது. ஐந்தாண்டு திட்டம் என்ற பெயரால் நடைபெறும் சதித்திட்டத்தைக் கண்டித்தும் முற்போக்கு நாடகங்களை நடத்த முடியாத வண்ணம், திரைமறைவிலே சதி செய்து கொண்டு வந்திருக்கும் நாடகச் சட்டத்தை உடைத்தெறிய எந்த நேரமும் போராட்ட பொதுச்செயலாளருக்கு அதிகாரத்தைக் கொடுத்தும் மாநில திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டை திருச்சியில் ஜூன் மாதம் நடத்துவதெனவும் தீர்மானித்தது. நமது இயக்க வரலாற்றில் பேரூரில் கூடும் பொதுக்குழு சிறந்த முடிவைச் செய்யும் என்பதற்கு சிகரம் அமைத்தாற்போல் ஒரு முக்கிய முடிவையும் செய்துள்ளது. அந்த முடிவை நாட்டு மக்களும்—குறிப்பாக தொழிலாளர் சமுதாயமும், "நல்ல முடிவு" என்று வாயார போற்றி வரவேற்கிறது. இந்த நல்ல முடிவை செய்த பொதுக்குழு உறுப்பினர்களை வரவேற்கிறது—போற்றுகிறது.

'தொழிலாளர் மத்தியில் வேலை செய்ய தி. மு. கழகமும் ஈடுபடும்' என்கின்ற நிலைதனை அறிகின்ற பொழுது இந்த முடிவுகளைத்தான் தொழிலாளர் சமுதாயம் 'நல்ல முடிவு' என வரவேற்கிறது. தொழிலாளர்களை இரக்கமின்றி பழிவாங்கும் முதலாளி வர்க்கமும்—அதன் பாதுகாப்பான அரசாங்கமும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கும் இந்த நேரத்தில் வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகளின் பிடிப்பில் சிக்கியுள்ள தொழிற்சங்கங்கள், இந்த நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தை தங்கள் ஆதிக்கத்திற்கு அரணாகக் கொண்ட கட்சிகளில் ஈடுபடுத்த 'தொழிற் சங்கம்' என்ற லேபில் ஒட்டிக்கொண்டு தொழிலாளரை திரைமறைவில் பழிவாங்குகிறது.

கல்வி அறிவுற்ற நிலையில்—பழமையில் ஊறிப்போன மக்கள் சமுதாயத்தை — சாதி —மதம்—கடவுள் என்ற மூடநம்பிக்கையில் ஆழ்ந்திருக்கும் தொழிலாளர் வர்க்கத்தை—ஆசை வார்த்தை பல கூறி—தங்கள்பால் இழுத்து விடலாம் என மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இந்த தீர்மானத்தைச் செய்திருக்கும் மாநில தி. மு. க. பொதுக்குழுவை இந்த நாட்டுத் தொழிலாளர் சமுதாயம் போற்றத்தானே செய்யும்.

## போட்டியல்ல...

தொழிற் சங்கத் துறையில் தி. மு. கழகம் ஈடுபடுவது போட்டி சங்கங்களை நிறுவுவதற்காக அல்ல. தொழிற் சங்கங்களை அமைக்க வேண்டிய அவசியம் என்னவென்று ஓரளவேனும் சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் அதன் உண்மை நிலை தெரியும். தொழிற் சங்க துறையில் திராவிடர் இயக்கம் ஈடுபட நினைத்திருந்தால்—தொழிற் சங்கத்தை நாம் கைப்பற்றியாக வேண்டும் இ... திராவிடர் இயக்கம் கருதி இ...க்குமேயானால் இன்றல்ல ... கடந்த நாற்பது ஆண்டுகட்கு முன்னமேயே செய்திருக்க முடியும்.

இப்பொழுது தோன்றி யிருக்கும் தொழிற் சங்கவாதிகள் இந்த நாட்டிலே உலாவுவதற்கு முன்னமேயே இந்த நாட்டில் திராவிட இயக்கம் சிறந்த முறையில் பணியாற்றி வந்திருக்கிறது. இதை மற்ற தொழிற் சங்கங்களும் மறுக்க முடியாத உண்மையாகும். இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல இருக்கிறது. அரசியலில் ஆங்கில ஏகாதிபத்தியமும், அதன் பாதந்தாங்கிகளான வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகளும் இந்த நாட்டை மென்மேலும் தலைதூக்கா வண்ணம் செய்கிறது. இதன் இடையில் சமுதாயத்தில் ஆண்டான்—அடிமை என்றும், சாதி—சமயம் என்றும், கடவுள்—விதி என்றும், மக்களை மடமையில் ஆழ்த்தி—அவர்கள் கல்வி அறிவு பெறு வண்ணம் செய்தனர். அப்படி அவர்கள் சிந்திக்கத் தொடங்கும் பொழுது கோவில் மணியோசையை முழக்கி அவர்கள் எண்ணத்தை —பரமனின் திருஅடியை நாடி கைலாயத்திற்குச் செல்லும் மார்க்கம் இது—இதைப் பார்—பரமனின் சக்தியைப் பார்—பரமனின் திருவிளையாடலைப் பார்—என அவர்களுடையசிந்தனையை வேறு திசை நோக்கி திருப்பி விட்டனர். ஒரு வஞ்சக் கூட்டத்தவர்.

அரசியலும், சமுதாயமும் தான் அந்நிலை என்றால் பொருளாதாரம் மட்டும் சிறந்து விளங்குகிறதா? என்றால் அதுவும் இல்லை. உழைப்பவன் ஒருவன் அதன் பலனை அடைபவன் மற்றொருவன். அந்நிய நாட்டு ஏகாதிபத்தியவாதிகளும்—உள்நாட்டு பண மூட்டைகளும், நிலத்திமிங்கிலங்களும் தன் ஏகபோக உரிமையாக்கிக் கொண்டது பொருளாதாரத்தை, அரசியலிலே மாற்றானுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்: சமுதாயத்திலே ஒரு சில நயவஞ்சக சோம்பேறிக் கூட்டத்தால் நம்மிடையே பல பிரிவுகளாக—ஜாதிகளாக—தாழ்த்தப்பட்டவர்களாக கிடக்கின்றோம். பொருளாதாரத்தில் தலைதூக்கா வண்ணம் அழுத்தப்பட்டு கிடக்கின்றோம்.

எனவேதான் இந்த நாடு மற்ற நாடுகளைவிட பின்னணியில் நிற்பதாகும். வறுமையால் இந்நாட்டு மக்கள் வாட்டப் படுவதற்குக் காரணமாகும். அரசியல்—பொருளாதாரம் — சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலும் இந்த நாட்டு மக்கள் விழிப்படைந்தாலொழிய வாழ்வில்லை என்பதைத் திட்டவட்டமாக தெரிந்த காரணத்தினால்தான் அன்று சர். பி. டி. தியாகராய செட்டியார் உட்பட இன்று பெரியார், அறிஞர் அண்ணா அவர்கள் உட்பட அதற்காக அரும்பாடுபட்டுக் கொண்டு வருகின்றனர்.

## தொழிற்சங்கமும் தொழிலாளர்களும்

தொழிலாளர்களின் குறைகளை அவ்வப்போது முதலாளிகளிடத்திலேயும் — சர்க்காரிடத்திலேயும் தெரிவித்து அதற்கான உடனடியான பரிகாரங்களை காண வேண்டிய பொறுப்பு தொழிற் சங்கத்தைச் சார்ந்ததாகும். மேலும் அக்குறைகளை போக்குவதற்கான நடவடிக்கைகள் — வழக்குகள்— எடுப்பதும், அவ்வப் பொழுது வரும் சில்லரைச் சச்சரவுகளைப் போக்குவதும் தொழிற் சங்கத்தின் வேலையாகும். ஆனால் இந்த எண்ணத்தில் கட்சிகளுக்கோ— ஜாதிகளுக்கோ— மதங்களுக்கோ சற்றேனும் இடமின்றி சமநிலைக் கண்ணோட்டத்தோடு நடுநிலையிலிருந்து பார்பட்சமற்ற முறையில் இருந்து வேலை செய்வதுதான் தொழிற் சங்கத்தின் கடமையாகும். இதைத்தான் நல்லோர் அனைவரும் அறிவர்—ஒப்பர்—வரவேற்பர். ஆனால் இன்றைய தினம் இந்த நாட்டிலே இம்முறையிலே தொழிற் சங்கம் இயங்குகிறதா என்பதை நாம் பார்ப்போம். நல்லோர் மட்டுமல்ல — தீயோரும் கூட இந்நிலையில் தொழிற் சங்கங்கள் இயங்குகிறது என ஒப்புக் கொள்ள மாட்டார்கள் ஏன்? கூலி உயர்வு வேண்டும் என்றால் ஒரு கட்சிக்காரனுக்கு மட்டுமல்ல இந்தப் பிரச்சினை. அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அத்தனை பேருக்கும் சார்ந்ததுதான். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக — ஒற்றுமையாக ஒன்றுபட்டு போராடினாலொழிய அவர்களுடைய கோரிக்கைகளைப் பெற முடியாது என்பதைத் திட்டவட்டமாக உணர்ந்த காரணத்தால்தான் நாம் அன்று முதல் இன்றுவரைத் தொழிற் சங்கத்தில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் கூடாது என்று வன்மையாகக் கண்டித்து வந்துள்ளோம்.

1. கட்சி சார்பற்ற முறையில் தொழிற் சங்கங்கள் இயங்க வேண்டும்.

2. தொழிற் சங்கங்கள் போட்டியாக ஏற்படுத்தி தொழிலாளர்களின் சக்தியைச் சிதறடிக்கக் கூடாது.

3. தொழிலாளருக்கு ஏற்படுகின்ற குறைகளை—கோரிக்கைகளை அவ்வப் பொழுது நியாயமான முறையில் சிறிதும் பலாத்காரத்திற்கு இடமின்றி தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

"திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற உன்னத இலட்சியத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வப்பொழுது தொழிற் சங்க துறைகளில் மேற்கண்ட வேண்டுகோளையும் எச்சரிக்கைகளையும் விடுவித்துக் கொண்டே இருந்தது. சென்ற கால திராவிடர் இயக்க ஏடுகளான 'திராவிட நாடு' 'திராவிடன்' 'போர்வாள்' 'மன்றம்' ஆகிய ஏடுகளைப் படிப்போரும், அறிஞர் அண்ணா அவர்களின் மேதின சொற்பொழிவுகளைக் கேட்போரும் இதை நல்ல முறையில் உணர்ந்திருப்பர். தொழிற் சங்கத் துறையில் திராவிட முன்னேற்றக் கழகம் கூறிய இக்கருத்துக்களை தவறென எந்த அரசியல் வாதிகளாயினும் அவர்கள் மார்க்சீயவாதிகளாயினும் சரி சமதர்மவாதிகளாயினும் சரி கூற முடியுமா? முடியாது மட்டுமல்ல அவ்வப்போது இந்தக் கருத்துக்களை நல்லதுயென ஒப்புக்கொண்டுள்ளனர். இருந்தாலும் கூட இந்த வேண்டுகோள் நடைமுறைக்கு வராமல் 'செவிடன் காதில் ஊதிய சங்கானதேன்?

## நாமும்—அவர்களும்

தி. மு. க. தோழர்கட்கு தொழிலாளர் இடையில் வேலை செய்வதற்கு போதிய ஊக்கத்தை அளிக்கும் பொதுக்குழுவானது சில பிற்போக்குவாதிகளுக்கும்—தங்களை முற்போக்குவாதிகள் என கருதிக் கொள்ளும் சிலபித்தலாட்டக்காரர்களுக்கும் சிறிது ஆத்திரத்தை உண்டு பண்ணத்தான் செய்யும் இது இயற்கையுங் கூட.

நாம் அவர்களைப்போல தொழிலாளர்களிடத்தில் ஆவேச வார்த்தைகளைக் கூறி பலாத்காரமாக—கட்டாயமாகபணத்தைப் பிடுங்கிக் கட்சியை வளர்க்க வேண்டும் என்ற முறையை—தன்மையை உடையவர்களல்ல. அந்த முறையில் வளர்க்கப்பட்டவர்களுமல்ல. கண்ணியம்—கட்டுப்பாடு-கடமை என்ற பண்பின் அடிப்படையில் வளர்ந்தவர்கள்.

எனவேதான் நாம் தொழிலாளர் இடையில் வேலை செய்ய—தொழிற் சங்க ரீதியில் செயல்பட—அதுவும் தன்னுட்டுப்பற்று—மொழிப்பற்று கொண்டு இயங்க வேண்டும்—என நாம் நினைக்கின்றோம். மற்றவர்கட்கு உரிமை உள்ளதுபோல நமக்கும் இந்த உரிமை உண்டு. ஆனால் 'தொழிலாளர் மத்தியில் பிளவுபடுத்துகிறார்கள்' 'போட்டியாக அமைக்கிறார்கள்' 'பிற்போக்குவாதிகள்' 'கருங்காலிகள்' முதலாளியின் 'கைக்கூலிகள்.' என்றெல்லாம் வசை மொழிகளை—கண்டனக் கணைகளை நம்மீது வீசத்தான் செய்வார்கள். இருப்பினும் நமது பணியினை செய்வதோடு—அமைதியாக-பொறுமையாக நாம் செல்வோம் புதுப்பாதையை நோக்கி. பேரூர் பொதுக்குழு காட்டிய மறுமலர்ச்சிப் பாதையை நோக்கி!

வாரீர்! வாரீர்!!

## "திராவிடன்" சந்தா விவரம்

உள்நாடு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு சந்தா ... | ரூ. | 8 | 0 | 0 |
| ஆறுமாதம் ... | ரூ. | 4 | 0 | 0 |
| தனிப்பிரதி ... | ரூ. | 0 | 3 | 0 |

வெளிநாடு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு சந்தா ... | ரூ. | 9 | 0 | 0 |
| ஆறு மாதம் .. | ரூ. | 4 | 8 | 0 |
| தனிப்பிரதி .... | ரூ. | 0 | 3 | 6 |

சிறுகதை

# சகுனம் பார்த்து...!

டி. புருடோத்தமன், சென்னை.

## ஒரு பழைய கதை

காலை நேரம், கிளிகள் கிள்ளை மொழி பொழிந்து பறக்க ஆரம்பித்திருந்தன. பனித் திரை விலகவில்லை. ஒவ்வொரு பொருளும் மங்கலாகத் தெரிந்தன.

அதற்கிடையே, அந்நாட்டு மன்னனின் கோட்டை மதிற்சுவர் கம்பீரமாகக் காட்சியளித்தது. ஏழையின் அழுத கண்ணீர் போல் மதிற்சுவரிலே பாசி படிந்திருந்த தற்கிடையில் பனித் துளிகள் ஒன்று சேர்ந்து சுவரையே அழ வைத்தன.

கதிரவனின் பொன் கதிர்கள் பனித் துளிகளை நடனமாட வைத்தது வர்ண ஜாலங்களைக் காட்டி கற்பனையைத் தூண்டி விட்டு மறைந்துவிடும் வான வில்லைப் போன்று பனித் துளிகளும் மறைந்துவிட்டன. கோட்டைக் கருகாமையில் செடிகளிலே தூங்கிக் கிடந்த அரும்புகள் பனித் துளிர்கள் மறைந்த வேகத்தைக் கண் விழித்துப் பார்ப்பதுபோல் மலர்ந்து மணத்தைப் பரப்பின.

இப்பொழுது எல்லாம் பளிச் சென்று தெரிந்தது. வானளாவி நின்ற கோட்டைச் சுவருக்குப் பக்கத்திலே, அரண்மனையின் குப்பை தொட்டி காட்சி யளித்தது. கம்பீரமான தோற்றமும் மந்தமான புத்தியும் உடைய மனிதர்களை அது நினைவூட்டியது.

அதோ......நன்ருக உற்றுப் பாருங்கள். ஓர் உருவம்! அசைவது தெரியவில்லையா? எண்ணெய் கண்டிராத செப்பட்டை மயிர் உலர்ந்த உதடுகள், வரண்ட விழிகள், ஒட்டிய வயிறு. மெலிந்த தேகம். தெருவிலே சாதாரணக் காட்சி தான். மன்னர் மன்னனின் மாட்சிமை பொருந்திய ஆட்சிக்கோளாறின் சின்னம்தான் அந்த உருவம்! ஆமாம். அவன் தெருவிலே சுற்றி அலைபவன்... ..உலகே மாயம், வாழ்வே மாயம் என்ற வரட்டு வேதாந்த வார்த்தைகளை வாழ வழி கிடைக்காததால் வாழ்க்கையில் கடை பிடிப்பவன், மெதுவாக எழுந்தான். தன் மெல்லிய கரங்களால் ஒன்ருேடொன்று சிக்கிச் சிக்கலடைந்துக் கிடந்த தலை மயிரை பின்னுல் ஒதுக்கினுன். ஆடி அசைந்து நடக்க ஆரம்பித்தான். வயிறு ஒலமிட்டது. வழியின்றி பரிதவித்தான். ஆனுல் கோட்டையில்......

மன்னர் மன்னன் தன் பட்டு மெத்தையிலிருந்து நித்திரைநீத்து எழுந்து உட்கார்ந்த நேரம். அழகிய உருவத்தினளான ராணியின் பஞ்சு போன்ற உடலை அணைத்து படுத்த இரவினை அகற்ற, கதிரவனின் சூடான கரங்கள் பெருமுயற்சி செய்திருந்தன. கனிப்புத் தந்த கன்னியின் உடல், கலைந்த ஆடைகளுடன் நெகிழ்வதைக் காணப் பிடிக்கவில்லையோ என்னவோ. மன்னன் கட்டிலை விட்டு எழுந்தான். சாரளத்தின் வழியாக வெளியே தலையை நீட்டி இவ்வுலகத்தின் இயற்கை வனப்பைக் கண்டு இன்புற விழைந்தான். ஆனுல் அவன் கண்ட காட்சி...

அழுக்கடைந்த உடலுடன் அவலட்சணச் சொரூபியான அந்தச் சிறுவன் சாக்டைப் புழு...காலையில் முன்னுல் வந்து நிற்கிருன்... கொற்றவனுக்குக் கோபம் வந்து விட்டது. காலைக்காட்சி களிப்பூட்டவில்லை. கடுஞ்சினத்தை தந்தது. தலையை வெடுக்கென்று உள்ளுக் கிழுத்தான். ஆனுல் மன்னனின் சினத்தை மரத்தாலாக்கப்பட்ட அந்த சாரளம் சட்டை செய்ய வில்லை. மன்னனின் தலையிலே மகத்தான காயம்பட்டு விட்டது. இரத்தமும் பெருக்கெடுத்தது.

அரசாங்க வைத்தியர் வந்தார் அவசரமாக மருந்துகளைத் தயார் செய்தார். மந்திரியார் பக்கத்திலே நின்றுக் கொண்டிருந்தார். மன்னனின் முகத்திலே புகை இழுக்கும் பொழுது மின்னும் சிகரெட்டைப் போல கோபம் மாறி மாறித் தோன்றியது.

"மந்திரியாரே..."

"அடியேன்"

தெருவிலே செருக்குடன் சென்றுக் கொண்டிருக்கிருன் ஓர் சிறுவன், அவனை அழைத்து வாரும்.

மந்திரி விரைந்தார். காவலாளிகளுக்குக் கட்டளை பிறந்தது. ஒன்றுமறியாத அந்தப் பாலகன் கொற்றவனின் முன்னுல் குற்றவாளியாக நின்றுக் கொண்டிருந்தான்

மதிகெட்ட சிறுவனே...கோபத்தால் மன்னனின் வார்த்தைகள் ஒழுங்காக வெளிவர மறுத்தன...

மந்திரியாரே...கேளும் சேதியை இந்தச் சுட்டிப்பயல் என்னவேலை செய்திருக்கிருன் தெரியுமா?

"அடியேன்...!"

"காலையில் இவன்தான் சகுனம்! அதனுல் கிடைத்த பரிசு தான் எனக்கிந்த காயம்!"

மந்திரி என்ன சொல்வதென்று புரியாமல் தடுமாறினுர். ஏழைச் சிறுவனே ஏங்கி நின்ருன். தன்னுடைய நிலைமையைப் புரிந்துக் கொண்டான். சிங்கத்தின் முன் சிறுநரி. என்ன செய்வதென்று பலமாக யோசித்தான், கன்னகளிலே நீர் கரைபுரண்டோடியது.

'மந்திரியாரே!'

'அடியேன்'

இந்தப் பயல் உயிருடன் வாழ்ந்தால். இந்நாட்டு மக்கள் காலையில் இவனைச் சகுனம் பார்த்தால், அனைவருக்கும் ஆபத்துத்தான் அதனுல்...!

மந்திரி மௌனம் சாதித்தார்...

என்னய்யா...நான் சொல்வது புரிகிறதா?

அடியேன்

இவனுடைய தலையைச் சீவி விடுங்கள்!' மன்னனின் முடிவு.

மன்னனின் முடிவு கண்டு சபையோர்களும் கண் கலங்கினர். மந்திரியின் நா தழதழத்தது. கட்டாயக் கட்டளையாயிற்றே. மறுப்புக் கூற மந்திரிக்கும் வாய்ப்பில்லை. ஆனுல் சிறுவன்.

லேசாகச் சிரித்தான் மற்றவர்கள் அதிசயித்தனர். மண்டியிட்டு மன்ருடினுன்.

மன்னர் மன்னனே...!

என்ன வேண்டும்?

ஒரு சிறிய வேண்டுகோள்

உனக்கா?

இறக்கப் போகிறேன். இறுதிக் கோரிக்கை.

தாராளமாகக் கேள்.

நீங்கள் என்னைத்தான் முதன் முதலிலே எழுந்தபொழுது சகுனம் பார்த்தீர்கள்? மிக மிக மெல்லிய குரலில் வணக்கமாகப் பேசினுன்

ஆமாம்,

தலையிலே பலமான காயம், இரக்கம் ததும்பியது வார்த்தைகளில்.

ஆமாம்

என்னை இந்நாட்டு மக்கள் காலையில் பார்த்து விட்டால் கெடுதல் விளையுமென்று நினைக்கிறீர்கள்?

சந்தேகமில்லாமல்

மன்னர் மன்னனே ஒன்று கூற

ஆசைப்படுகிறேன்.

தாராளமாகச் சொல்! கம்பீரமான குரல்.

நீங்கள் என்னைச் சகுனம் கண்டீர்கள். ஆனுல் நான்?

யாரைப் பார்த்தாய்?

உங்களைத்தான்.

அதனுல்?

என்னைப் பார்த்ததால் உங்களுக்குச் சிறிய காயம். ஆனுல் உங்களை நான் பார்த்ததால்...

என்ன?

தலையே போகப் போகிறது.

மந்திரி நடுங்கினுர். சபையோர்கள் யாது விளையுமோ என்று ஏங்கினர். ஆனுல் மன்னனின் முகத்திலே பகுத்தறிவின் பண்பு தென்பட்டது. புன்முறுவல் பூத்தான். பாலகனை அன்புடன் அணைத்துக் கொண்டார் அறிவு தெளிந்த கொற்றவன்!

# சிரி!

டைரக்டர்: கதாசிரியர் சார்!.. தேன் விழியாளாவது மீன்மொழ
யாளாவது?......என்ன சா
இதெல்லாம்? பொருத்தமாயி
லியே!

கதாசிரியர்: ஓ......! ஐ ஆ
சாரி! 'மீன் விழியாளே' தே
மொழியாளே' என்று இருக்க
ணும்' அவசரத்திலே...

*

விசிறி 1: இந்தப் படத்திலே
காதல் கட்டத்திலே ஹீரோயி
நடிப்பு ஒண்ணும் சோபிக்கலே
இத்தனைக்கும் ஹீரோ அவ
சொந்த ஹஸ்பண்டேதான்!

விசிறி 2: அதை ஏன் சொல
றீங்க போங்க! அதனுலே வந்
வினைதானே இது!

*

பல் வைத்தியர்: ஏன் இப்ப
டித் திடீர்னு உங்களுக்குப் பல்
வலி ஏற்பட்டது?

எதுனுச்சம் கடினமான பண
டங்களைக் கடிச்சிங்களா?

நாடக நடிகர்: அதெல்லாம
ஒண்ணுமில்லே சார்! மிஸ்டர்
பல்லடம் பல்லவன் வசனம் எழு
தின நாடகத்திலே நேத்து ராத்
திரி நடிச்சேன்! அவ்வளவுதான்!


—அமலன்


## ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1




மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்